Tamil Heritage Foundation International Digital Library EBook collection

Reg. No. M 1434 தனிப்பிரதி அணா 0—1—6

# நாடார்குலமித்திரன்

# THE NADAR KULA MITRAN.


நாடார்குல மித்திரன்
சந்தா விபரம்.

இந்தியா, பர்மா, சிலோன் முதலிய உள்நாட்டிற்கு வருடம் 1-க்கு ரூ 4-0-0.
சிங்கப்பூர், பினாங்கு, மலாக்கா முதலிய வெளிநாட்டிற்கு வருடம் 1-க்கு ரூபா 5-0-0.

திங்கட்கிழமை தோறும் வெளிவரும்,

வாரப் பதிப்பு.


"கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லாதவர்" (திருக்குறள்).

சுதந்திரம்! சமத்துவம்!! சகோதரத்வம்!!!


சூ. ஆ. முத்துநாடார் பத்திராசிரியர்

நாடார்குல மித்திரன்
விளம்பர விகிதம்.

கலம் 1-க்கு தடவை 1-க்கு ரூபா 8-0-0.
சில்லரை விளம்பரம் அங்குலம் 1-க்கு ரூ 0-8-0
நீண்டகாலம் விளம்பரஞ் செய்வோர் மானேஜருக்கு எழுதவும்.

மலர் 8 | கலியப்தவருடூ௫௨௪ள அக்ஷய ஷூ கார்த்திகை மீ ௨௰அ உ திங்கட்கிழமை 1926ஷூ டிசம்பர் மீ 13 உ | இதழ் 17



வெளிவந்துவிட்டது! வெளிவந்துவிட்டது!!

## மதனசுந்தரம்.

( ஒரு துப்பறியும் இனிய தமிழ் நாவல் )

மதுரை வாலிப நாடார் சங்க காரியதரிசி ஸ்ரீமான் கூ. அ. சங்கரலிங்க நாடாரவர்களால் எழுதப்பட்டது. "நாடார் குல மித்திரன்" பத்திராதிபர் ஸ்ரீமான் சூ. ஆ. முத்து நாடார் அவர்கள் முகவுரையுடன் கூடியது.

உண்மைக் காதலின் சிறப்பையும், பாலிய விவாகத்தால் ஏற்படும் கெடுசல்களையும், தாசிலோலர்கள் படும் சொல்லொணா கஷ்டங்களையும், வாலிப வயதுள்ள ஆண், பெண் இரு பாலர்களும் தனிபாக சந்திப்பதால் ஏற்படும் கெடுதல்களையும், கொலைபாவிகளின் தந்திரங்களையும், அவற்றைக் கண்டு பிடித்த வீரநாதரின் திறமையையும் தெளிவாக விளக்கிக் காட்டுவது.

ஒவ்வோரில்லத்திலும் அவசியமிருக்க வேண்டிய நூல். கொஞ்சம் காப்பிகளே கைவசமிருப்பதால் உடனே வாங்கி இன்பமடையுங்கள். கீழ்கண்ட விலாசதாரிடத்திலும், "நாடார்குல மித்திரன்" புத்தகசாலையிலும், கடம்பூர், ஷாப் வியாபாரம் செ. கு. பழனிச்சாமி நாடாரிடத்திலும் கிடைக்கும்.

விலை அணா 8; தபால் சார்ஜ் வேறு.

ஆ. பச்சைய நாடார், மானேஜர்,
"நாடார் மகாஜன லாட்ஜ்," மதுரை.



## நாடார்பாங்குலிமிட்டெட்,
## தூத்துக்குடி.

## விசேஷ வட்டி.

ஒரு வருஷத்துக்குக் குறையாமல் தவணைக்குப்போடும் தொகைக்கு வருஷம் ஒன்றுக்குரூபாய்

100 க்கு ரூ 6 வீதம் வட்டிகொடுக்கப்படும்.

விசேஷமாய் மைனர்கள், விதவைகள், பள்ளிக்கூடங்கள், பேட்டைகள் மகமை முதலிய பொது ஸ்தாபனங்களின் பணத்தை பந்தோபஸ்தாயும் நல்லவட்டியிலும் வைப்பதற்கு இதுவே ஏற்றஇடம். அவரவர்களுக்கு வேண்டிய பிரகாரம் மைனர்கள், கார்டியன்கள், அல்லது காரியதரிசிகள், பெயரால் கணக்குவைத்து யாரிடம்வட்டியும் முதலும் கொடுக்க விருப்பமோ அவ்விதம்கொடுக்க ஒழுங்கு செய்து கொள்ளலாம்.

கரன்ற் அக்கவுண்டிலும், சேவிங்க்ஸ் பாங்க் கணக்கிலும் பணம் போட்டு தேவையானபோது எடுத்துக்கொள்ளலாம். விபரங்களைப் பற்றி ஏஜெண்டுக்கு எழுதித் தெரிந்து கொள்ளலாம்.



No. 1.
பட்டணம் பொடி

உலகெங்கும் புகழ் பெற்று
24 தங்க மெடல்கள் பரிசு பெற்ற
மதராஸ்

தந்தி விலாசம்
'மூக்குத் தூள்'
தபால் பெட்டி
நெ. 555
மதராஸ்.

என். வி. ஷண்முகம் கம்பெனியார்

# பட்டணம் பொடி

காரம், மணம், குணம், நிறம், வாடை கமழ்கின்றன.
ஒவ்வொரு இந்தியரின் மனத்தையும் குதூகலிக்கச் செய்கிறது.
மாரிகாலத்துக்கு ஏற்றவாறு காரம் மணம் தரும்படி தயாரிக்கப்படுகிறது.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection



# மெய்வாழ்க்கை கண்டறிந்த வேந்தன்.

## புத்தர் ஞானம்.

(முருகதாஸன் எழுதுகிறார்.)

இப்படியாக போதிமரத்தடியில் நிஷ்டையிலமர்ந்து புத்தத்வமடைந்து தான் கண்டுபிடித்த உண்மையை உலகுய்யுமாறு போதிக்கப்பிரயத்தனஞ் செய்யவிருக்க, இவருடைய தகப்பனார் மகன் பக்கத்திலில்லாமல் மிகுந்த விசனத்துடன் வாழ்ந்துவந்தார். யசோதையும் தன் நாயகனை இழந்து வாழ்வின் இன்பங்களொன்றையும் அறியாது மிகுந்த துயரத்துடன் காலந் தள்ளினள். அடிக்கடி வருவோர் போவோர்களிடமெல்லாம் விசாரிப்பாள். சிலர் ஒரு துறவியைக் கண்டதாக சமாச்சாரம் அறிவிப்பார்கள். உடனே அரசரிடமிருந்து தூதர்கள் போய் விசாரித்து வீட்டைத்துறந்து தனிமையாக அலையும் யாதானும் ஒரு துறவியைப்பற்றி சமாச்சாரங்கொண்டு வருவார்களேயன்றி கபிலவாஸ்து யசோதையரின் உயிர்க்குயிரான சித்தார்த்தனைப்பற்றி ஒரு செய்தியும் கொண்டுவந்ததில்லை. அவன் தன் தேசத்திலிருந்து வெகுதூரம் அலைந்து தன் வீட்டை மறந்து நன்றாக உருமாறியோ அல்லது இறந்தோ போய் விட்டானென்று அநேகர் எண்ணினர்கள்.

மாமரங்களெல்லாம் இளந்தளிர்களாலும், புஷ்பங்களாலும், சிறுபிஞ்சுகளாலும் மூடப்பட்டு பூமியெல்லாம் பச்சைப்போர்வை போர்த்து சந்தோஷித்திருக்கும் வசந்த காலத்தில் ஒரு நாள் யசோதை அரண்மனையைச்சுற்றிய உத்தியான வனத்தில் இருபக்கமும் தாமரை மலர்களால் மூடப்பட்டு முன்னாள் இவளும் சித்தார்த்தனும் சந்தோஷமாக விளையாடுவதை தன் கண்ணாடிபோன்றமார்பிற்பிரதிபலித்த வாய்க்காலின் கரையில் நடந்து கொண்டிருந்தாள். அவள் கண்ணிமைகள் அழுது சிவந்துபோயிருந்தன. முகம்வாடி கன்னங்கள் ஒட்டிப் போயிருந்தன. முற்காலத்திற் புன்னகை தவழ்ந்த இதழ்கள் தற்போது நன்றாக மூடிஉள்ளிழுக்கப்பட்டிருந்தன. கருவண்டுபோன்றிருந்தகூந்தல்ஒளி மழுங்கி சடைபிடித்து ஒரு பக்கமாக இறுக்கிக்கட்டப்பட்டிருந்தது. உடம்பில் ஒரு ஆபரணமுந்தரியாமல் விதவைகளுடை போல் வெள்ளாடையும், சரடுமாடாயும் ஒருடை கட்டியிருந்தாள். தன் நாயகனது சப்தத்தில் மான்குட்டிபோல் கீழே பாவாது அசைந்து கொண்டிருந்த கால்கள் இப்பொழுது மெல்லவருந்தி நடந்தன. இரவில் எவ்விடத்தும் இனிமையும் பிரகாசமும் கொடுத்துக்கொண்டிருந்த கண்கள் அவையெல்லாமிழந்து வசந்தகாலம் வந்ததைச் சிறிதும் கவனியாது அங்குமிங்குமலைந்துகொண்டிருந்தன. சித்தார்த்தன் தன்னைவிட்டுப் போன நாள் முதல் எப்பொழுதும் தன்னுடனேயே கொண்டுபோய்க்கொண்டிருந்த அவனதரைக்கச்சையைக் கையிற் பிடித்துக்கொண்டிருந்தாள். மற்றொரு கையில் சித்தார்த்தன் தன் பின் விட்டுப்போன ராகுலன் என்ற பையனை (மகனை) நடத்தினள். அவனுக்கு இப்பொழுது எழுவயதாயிருந்தது. அவன் தந்தையின் அழகும் இனிமையும் இவனிடமும் விளங்கின. அவன் தாயின் விசனமொன்றையும் அறியாது, வசந்த காலத்தைக்கண்டு சந்தோஷத்துடன் அவள் பக்கம் குதித்துக்கொண்டு சென்றான்.

இப்படி அவர்கள் தாமரைத்தடாகங்களின் பக்கமாக நடந்துகொண்டிருக்கையில் ராகுலன் அக்குளங்களில் அகிசியைவாரியிறைத்து அலைகளிலுள்ள அழகிய மீன்கள் ஒன்றின்மேலொன்று விழுந்துகொண்டு அதைத்தின்பதைக் கண்டு களித்துக்கொண்டிருந்தான். அப்போது யசோதை அங்கு பறந்து கொண்டிருந்த கொக்குகளைப் பார்த்து எப்பொழுதும் அலைந்து கொண்டிருக்கும் கொக்குகளே! நீங்கள் என்நாதன் ஒளிந்திருக்கும் இடத்தில் இறங்குவீர்களாயின், அவர்வாயினின்றுவரும் ஒரு மொழிக்காக யசோதை சாகிறாள் என்று அவரிடம் சொல்லுங்கள் என்று பெருமூச்சுவிட்டாள். இப்படி இவர்களில் ஒருவர் துக்கிப்பதும் மற்றவர் சந்தோஷமாக விளையாடுவதுமாக இருக்கையில், இரண்டுபெண்கள் வந்து தாயே! அஸ்தினபுரத்து வர்த்தகர் இருவர் வெகு விநோதமான ஆபரணங்கள் கொண்டுவந்திருக்கிறார்கள். ஆனால் அவர்கள் வேறொன்று கொண்டுவந்திருப்பதை நோக்குங்கால் இதெல்லாம் அற்பமாகத்தோன்றும், ஏனெனில் இந்நாட்டிற்குத் திலகம் போன்ற உன்நாயகன் சித்தார்த்தனைப்பற்றிச் செய்திகொண்டுவந்திருக்கிறார்கள். அவர்கள் அவரை நேராகக் கண்டு தொழுதார்கள். ஏனெனில் அவர்கள் அவர் முன் சோதிடர் கூறியதுபோல் ஞானிகட்குள் ஞானியாயும், உலகம் வணங்கும் பரிசுத்தராயும் இருக்கிறார். இன்சொல்லாலும், ஆகாயம்போல் உலகம் முழுவதும் பரந்த கருணையாலும், மனிதர்க்கு நன்மார்க்கத்தை காண்பித்துக்கொடுத்து உயிரையெல்லாம் முத்திநெறிகொண்டு சேர்க்கும் புத்தன் ஆய்விட்டார். அவர் இவ்விடம் நோக்கி வருகிறாரென்று இவர்கள் சொல்லுகிறார்களென்றார்கள்.

இதைக்கேட்டதும் யசோதைக்கு உடலில் இமயமலையில் பனிக்கட்டியுருகும் பொழுது கங்கை பிரவாகித்துப் பரப்பதுபோல் சந்தோஷத்தினால் உதிரவெள்ளம் பரந்தது. கண்களில் நீர் சோர இதழ்களில் புன்னகைதவழ அப்பெண்களைப் பார்த்து அவ்வணிகரை விரைவில் அழைத்து வாருங்கள். அவர்கள் கொண்டுவரும் செய்தியைப் பானம்பண்ண என் செவிகள் தவிக்கின்றன. போய் அவர்களைக்கொண்டுவாருங்கள். அவர்கள் சொல்வது உண்மையானால் அவர்களது பைகளை அரசரும் பொறாமை கொள்ளும்படியான இரத்தினங்களால் நிறப்புவேன். போய் அழைத்துவாருங்கள் என்றாள்.

அவ்வர்த்தகரும் அவ்வின்ப வீட்டின் அழகிய பாதைகளின் வழியாக மெல்ல நடந்து அவ்விடத்தழகுகளையெல்லாம் கண்டதிசயித்துக்கொண்டு உள்ளறைக்குட் சென்றார்கள். அவர்களங்கு சென்றதும் அங்கே விரிக்கப்பட்டிருந்த ஒரு திரையின் பின் பக்கத்திலிருந்து யசோதை தழதழத்த பேச்சுடன் அவர்களைப் பார்த்து ஐயன்மீர்! நீங்கள் வெகுதூரமிருந்து வருகிறீர்கள். நீங்கள் என்நாயகனைக்கண்டு மிருக்கிறீர்கள். இது உண்மையானால் நீங்களென்வீட்டிற்குத் தோழராகின்றீர்கள். உங்கள் வரவு சந்தோஷத்தைக் கொடுக்கிறது என்றாள்.

உடனே அவர்களில் திரிபுஷன் என்பவன் அரசியே! நாங்கள் அத்தூய இறைவனைக்கண்டோம். அவர் சேவடிகளை வணங்கினோம். நீங்கள் இழந்த வாசன் இப்போது இராஜாதிராஜரிலும் சிரேஷ்டனாயிருக்கிறார். பல்குநதியண்டையில் போதிமரத்தின் நிழலில் எல்லார்க்கும் தோழன் எல்லார்க்கும் இறைவனான உன் நாதன் உலகத்தைரட்சிக்கும் தர்மத்தை அறிந்தார். இவ்வுலகத்தின் துன்பம் அணுகாதபடி மிகவுயர்ந்து பிரகாசித்துக்கொண்டிருக்கிற பகவான் புத்தர் சுகமென்று நாங்கள் சொல்லவும் வேண்டுமோ. மேலும் அவர் ஒவ்வொரு நகரத்திலும் புகுந்து முத்தி மார்க்கத்தைச் சொல்லும்பொழுது உலர்ந்த சருகுகள் காற்றின்பின் செல்வதுபோல் மனிதரது இருதயங்களும் அவர்பின் செல்கின்றன. கயாவுக்கருகிலுள்ள வனத்தில் நாங்களே அத்திருவாயினின்று வரும் அற்புத வசனங்களைக்கேட்டோம். கேட்டு வணங்கினோம். அவர் மழைக்காலந்தொடங்குவதற்கு முன் இவ்விடம் வருவார் என்றான்.

---

# ஸத்திய தரிசனம்.

## மகாத்மா காந்தியின் ஜீவிய சரித்திரம்.

2-ம் பாகம். அத்தியாயம் 28.

மகாத்மாகாந்தி சென்ற வாரத்திய "யங்இந்தியா" பத்திரிகையில்பின் வருமாறு எழுதியிருக்கிறார்:—

### லோகமான்ய திலகர்.

ஸர். பிரோஸ்ஷா மேட்டா என் வேலையைச் சுலபமாக்கிவிட்டார். ஆகவே நான் பம்பாயிலிருந்து பூனாவிற்குச் சென்றேன். ஆனால் அங்கு இரண்டு கட்சிகளிருந்தன. முதலில் நான் லோகமான்ய திலகரைக்கண்டேன். அவர் கூறியதாவது:—

"நீங்கள் எல்லாக் கட்சிகளினுடையவும் உதவியை நாடுவது மிகவும் சரியே. தென் ஆப்பிரிக்கா விஷயத்தில் அபிப்பிராயபேதமிருக்காது. ஆனால் ஒரு கட்சியிலும் சேராத ஒருவரை நீங்கள் கூட்டத்திற்குத் தலைவராக நியமிக்க வேண்டும். ஆசிரியர் பந்தார்க்கரைப் போய்ப் பாருங்கள். சமீபகாலமாக அவர் பொது விஷயங்களில் கலந்து கொள்ளவில்லை. ஆயினும் இந்த விஷயம் அவரை வெளியே இழுக்கக்கூடும். அவரைச் சந்தித்து அவர் கூறுவதை என்னிடம் தெரிவியுங்கள். என்னால் சாத்தியமான பூரா அளவிற்கும் உங்களுக்கு உதவி செய்யவிரும்புகிறேன். உங்களுக்கு எப்போது வேண்டுமானாலும் என்னிடம் வாருங்கள். நான் தயாராகக்காத்துக் கொண்டிருக்கிறேன்."

லோகமான்யருடன் இப்போது தான் நான் முதல் தடவை சந்தித்துப் பேசினேன். அவருடைய ஒப்பற்ற புகழின் காரணத்தை இது நன்கு விளக்கி விட்டது.

### கோகலேயுடன் சந்திப்பு.

பிறகுநான் கோகலேயிடம் சென்றேன். அவரை நான் பெர்கூஸன் ஸர்வகலாசாலை மைதானத்தில் சந்தித்தேன். அவர் என்னை மிகுந்த பிரியத்துடன் வரவேற்றார். அவருடைய நடத்தை என்னை உடனே வசியப்படுத்தி விட்டது. அவரையும் நான் அப்போது தான் முதல் தடவை சந்தித்தேன். ஆயினும் பழய சிநேகிதர்கள் மீண்டும் சந்திப்பதுபோல் அது தோன்றியது. ஸர்பிரோஸ்ஷாமேட்டா ஹிமாலய மலையைப்போலவும், லோகமான்யதிலகர் சமுத்திரத்தைப்போலவும் எனக்குத் தோன்றினார்கள். ஆனால் கோகலே கங்காநதியைப் போலிருந்தார். புண்ணிய நதியில் ஒருவர் சௌகரியமாக ஸ்நாநம்செய்ய முடியும். ஆனால் ஹிமாலயமலையில் மேலே ஏறமுடியாது. சமுத்திரத்திலும் எவரும் சுலபமாக இறங்கிச் சென்று விடமுடியாது. ஆனால் கங்கைநதி என்னை அதற்குள் இறங்கும்படி இழுத்தது. ஒரு படகு, ஒரு துடுப்பு இவற்றுடன் கங்கையில் இறங்குவது பெரிய ஆனந்தமே. பள்ளிக்கூடத்தில் சேரவந்திருக்கும் பையனை ஆசிரியர் எவ்வளவுதூரம் பரீக்ஷிப்பாரோ அம்மாதிரி அவர் என்னைப் பரீக்ஷித்தார். யாரிடம் எவ்வாறு சென்று கேட்பதென்று அவர் எனக்குப் போதித்தார். என்னுடைய பிரசங்கத்தைப் பார்க்கவிரும்புவதாக அவர் அறிவித்தார். கலாசாலை முழுவதையும் சுற்றிக் காட்டிவிட்டு, தாம், நான் எப்போது வேண்டினாலும் தயாராக விருப்பதாயும், டாக்டர் பந்தார்க்கரைக் கண்டு பேசிவிட்டு அவர் கூறுவதைத் தம்மிடம் வந்து தெரிவிக்க வேண்டுமென்றும் கூறி மிகுந்த சந்தோஷத்துடன் என்னை அனுப்பினார். ராஜீய விஷயத்தில் கோகலே என்மனதில் வகித்த ஸ்தானம் எப்போதுமே தனிமையாக இருந்து வருகிறது.

டாக்டர் பந்தார்க்கர், தகப்பனார்தன் பிள்ளையை வரவேற்பதுபோல் என்னை வரவேற்றார். நான் அவரைப் பார்க்கச் சென்றபோது பகல் 12-மணி ஆயிற்று. நான் அந்த நேரத்திற்குப் பார்க்கச் சென்றதிலிருந்து பொதுஜன ஊழியரான இவருக்கு அதிக அனுதாபமேற்பட்டது. ஒரு கட்சியிலும் சேராத ஒருவர் கூட்டத்தில் தலைமை வகிக்க வேண்டுமென்று நான் கூறியதை அவர் சுலபமாக ஏற்றுக்கொண்டு விட்டார். "அதுதான் சரி, அதுதான் சரி" என்று அவர் கூறினார்.

நான் கூறியவற்றையெல்லாம் கேட்டுக்கொண்டு விட்டு அவர் மேலே தெரிவித்ததாவது:—"நான் ராஜீய விஷயங்களில் கலந்து கொள்ளுவதில்லையென்று எவரும் உங்களுக்குக் கூறுவார்கள். ஆனால் நான் உங்களுடைய வேண்டுகோளை மறுக்க முடியாது. உங்களுடைய விஷயம் மிகவும் பலமானதாக இருக்கிறது. அதோடு நீங்கள் அதிக விடாமுயற்சியுடன் வேலை செய்து வருகிறீர்கள். ஆகையால் உங்களுடைய கூட்டத்தில் நான் கலந்துகொள்ள மறுக்கமுடியாது. திலகர், கோகலே இருவருடனும் நீங்கள் சந்தித்துப் பேசியது மிகவும் சரி. இரண்டு சபைகளினுடையவும் ஆதரவில் நடக்கும் கூட்டத்தில் நான் சந்தோஷத்துடன் தலைமை வகிக்கத் தயார் என்று அவர்களிடம் கூறுங்கள். என்று கூட்டுவதென்பதைப்பற்றி நீங்கள் என்னைக்கேட்க வேண்டாம். அவர்களுக்குச் சௌகரியமான காலம் எனக்கும் பொருந்தும்."

ஆடம்பரம் எதுவுமின்றிப் பூனாவில் சுயநலம் பாராமல்வேலைசெய்த இந்தப்பொது ஊழியர்கள் ஒரு கூட்டத்தை நடத்திவைத்து எனக்கு மிகுந்த சந்தோஷத்தையும், என் வேலைக்கு வெற்றியேற்படுமென்ற அதிகமான நம்பிக்கையையும் அளித்து அனுப்பினார்கள்.

### சென்னைப் பத்திரிகாசிரியர்களின் உதவி.

பிறகு நான் சென்னைக்குச் சென்றேன். அங்கு உற்சாகம் தாங்கமுடியவில்லை. பாலசுந்தரத்திற்கு நடந்த சம்பவத்தைபபற்றி நான் கூறியது கூட்டத்தில் ஜனங்களுடைய மனதில் நன்றாகப் பதிந்துவிட்டது. என்னுடைய பிரசங்கத்தை முன்னதாகவே எழுதி அச்சடித்தாகிவிட்டது. அது மிகவும் நீண்டதாக இருப்பதாக எனக்குத் தோன்றியது. ஆனால் ஜனங்கள் பொறுமையாகவும் மிகுந்த கவனத்துடனும் கேட்டனர். கூட்டம் முடிந்தவுடன் "பச்சைப் பிரசுரத்திற்கு" அதிகமான கிராக்கி ஏற்பட்டது. நான் உடனே அதைத் திருத்தி இரண்டாவது பதிப்பாகப் பதினாயிரம் பிரசுரங்கள் அச்சடித்தேன். சூடாக உள்ள பணியாரம் விற்பதுபோல் அவை துரிதமாக விற்பனையாயின. ஆனால் நான் அத்தனை காப்பிகளைப் பிரசுரித்திருக்கவேண்டியதில்லையென்று தெரிந்தது. என்னுடைய உற்சாக மிகுதியால் நான் தேவையை மிகைப்படுத்திக் கொண்டுவிட்டேன். ஆங்கிலம் தெரிந்தவர்களுக்குத்தான் என்னுடைய பிரசங்கம் உத்தேசிக்கப்பட்டது. சென்னையில் அந்தப் பிரிவினர் மாத்திரம் பதினாயிரம் காப்பிகளையும் வாங்கிவிட முடியாது.

"மதராஸ்ஸ்டாண்டர்டு"பத்திரிகையின் ஆசிரியர் காலஞ்சென்ற ஸ்ரீமான் ஜி. பரமேஸ்வரன்பிள்ளை எனக்கு மிகவும் அதிகமான உதவிசெய்தார். அவர் இந்த விஷயத்தைப்பற்றி நன்றாகப் படித்திருந்தார். அடிக்கடி என்னைத் தமது ஆபீஸிற்கு வரவழைத்து எனக்கு வழிகாட்டினார். ஹிந்துப் பத்திரிகையைச் சேர்ந்த ஸ்ரீமான் ஜி. சுப்பிரமணிய அய்யரும், டாக்டர் சுப்பிரமணியருங்கூட அதிக அனுதாபம்காட்டினார்கள். ஆனால்ஸ்ரீமான் ஜி. பரமேஸ்வரன்பிள்ளை தமது பத்திரிகையையே என் வசம் ஒப்புவித்தார். நான் இதைத் தாராளமாக உபயோகித்துக் கொண்டு அதில் அடிக்கடி எழுதிவந்தேன். பொதுக்கூட்டம் பச்சையப்பன் மண்டபத்தில் நடந்ததாயும் அதற்கு டாக்டர் சுப்பிரமணியம் தலைமை வகித்ததாயும் எனக்கு ஞாபகம்.

நண்பர்கள் என்னிடம் காட்டிய அதிகமான அன்பும், தென் ஆப்பிரிக்கா விஷயத்தில் காட்டிய உற்சாகமும், அளவுகடந்தனவாக விருந்தன. ஆகையால் நான் அவர்களுடன் ஆங்கிலத்தில் தான் கடிதப் போக்குவரத்தும் பேச்சுவார்த்தையும் நடத்த வேண்டியிருந்தபோதிலும் எனக்கு ஒன்றும் சிரமமாகவே தோன்றவில்லை. அன்பினால் வெல்லமுடியாத தடை என்ன இருக்கிறது?

Tamil Heritage Foundation International Digital Library EBook collection



## நாடார் மஹாஜன சங்கம், மதுரை.

### கவுன்வில் மீட்டிங்கு.

1926-ம் வருஷம் டிசம்பர் மீ 6 உ திங்கட்கிழமை மாலை 6-மணிக்கு சங்கம் ஹாலில் நடைபெற்ற கவுன்வில் மீட்டிங்கின் நடவடிக்கைகள் வருமாறு:—

திருமலாபுரம் ஸ்ரீமான் எஸ். ஆர். சுவாமிக்காளைநாடார் அவர்களால் பிரேரிக்கப் பெற்று மதுரை ஸ்ரீமான் எஸ். கே. துரைச்சாமி நாடார் அவர்களால் ஆமோதிக்கப் பெற்ற மதுரை நாடார் மகாஜன சங்கம் மாஜி காரியதரிசி ஸ்ரீமான் வெ. பெ. இரத்தினசாமிநாடார் அவர்கள் அக்கிராசனத் தமர்ந்து அடியிற்கண்ட தீர்மானங்கள் செய்யப்பட்டன.

அடியிற்கண்ட மெம்பர்கள் ஆஜராயிருந்தனர். ஸ்ரீமான்கள் மா. வே. பழனிச்சாமி நாடார் ஏ. பொன்னையாநாடார் வெ. பெ. இரத்தினசாமி நாடார் வா. அ. புன்னையப்பநாடார் மா. வேல்நாடார், ஆ. அ. ஆறுமுகநாடார், ப. ரா. முத்துச்சாமி நாடார் எஸ். கே. துரைச்சாமிநாடார், பெ. சு. பெரியசாமிநாடார், ஆ. பச்சைநாடார் மு. கூடலைமுத்துநாடார், மதுரை, ஆர். கே. பழனிச்சாமிநாடார், அ. மு. கு. விஜய ரத்தினசாமிநாடார், சின்னமனூர், மா. உ. சு. குருசாமி நாடார் கடையநல்லூர், எஸ். ஆ. சுவாமிக்காளைநாடார், திருமலாபுரம், அ. ரா. ப. அரசப்பநாடார், நாரையூருணி மு. வடிவேல்நாடார் சமையநல்லூர்.

1926-ம் வருஷம் செப்டம்பர் மீ 30 உ யோடு முடிந்த மூன்று மாசத்திய வேலைகளையும் வரவு செலவுகளையும் பற்றிய ரிப்போர்ட்டு காரியதரிசி ஸ்ரீமான் ஆ. அ. ஆறுமுக நாடார் அவர்களால் வாசிக்கப்பெற்று ஏகமனதாய் ஒப்புக்கொள்ளப்பட்டது.

நாடார்மகாஜன சங்கம் ஏழைமாணவர் ஸ்காலர்ஷிப் லாட்டரியில் வருலான தொகையில் நாளது தேதி வரை ஸ்ரீமான் பா. ம. பாண்டிய நாடார் அவர்கள் பேரால் இந்தியன் பாங்கில் வரவாக இருக்கிற ரூ 50000—0—2யும் நாளை 7-12-26யில நாடார் மஹாஜன சங்கம் காரியதரிசிகளாகிய ஸ்ரீமான் பா. ம. பாண்டியநாடார் 1. ஸ்ரீமான் ஆ. அ. ஆறுமுகநாடார் 2. இருவர் பேர்களால் கணக்கு மாற்றி கண்க்குவைக்கும் படிக்கும், ஷெலாட்டரி குறிப்பில் இருப்பு இருக்கிற ரூ 7037—5—6ல ரூ 637—5—6ம் வைத்துக்கொண்டுமீத ரூ.6400-0-0ம் மேற்கண்டவர்கள் பேரால் ஷெபாங்கில் போட்டுக்கொண்டு தேவைக்கு அவ்வப்போது "செக்" விட்டு எடுத்துக்கொள்ள வேண்டியதென்று கவுன்வில தீர்மானிக்கிறது.

நாடார் மஹாஜன சங்கம் ஏழை மாணவர் ஸ்காலர்ஷிப லாட்டரியின் மூலம் வசூலான நிதியை எவ்வகையில் வைத்து விருத்திசெய்வது என்பதைக்குறித்து ஆலோசிப்பதற்காக சங்கத்தின் 20-வது விதியின்படி விசேஷித்த ஜெனரல் மீட்டிங் கூட்டப்பட வேண்டுமென்று இக் கவுன்வில் அபிப்பிராயப்படுவதால் ஸ்பெஷல் ஜெனரல் மீட்டிங் தை மாதத்தில் மதுரையில் கூட்ட வேண்டுமென்று கவுன்வில் தீர்மானிக்கிறது.

1925-26ம வருடத்திற்குரிய ஸ்காலர்ஷிப் பாக்கிகளை கொடுக்கவேண்டிய விஷயத்தைப்பற்றி அடுத்துக் கூடும் ஜெனரல் மீட்டிங்கில் கவனிக்கப்படுமென்று கவுன்வில் தீர்மானிக்கிறது.

நமது சங்கம் கவுன்விலிலிருந்து தெரிந்தெடுத்து அனுப்பும் நாடார் குலப்பிரதிநிதிகளை கவர்ன்மெண்டார் சட்டசபை அங்கத்தினர்களாக ஒப்புக்கொள்ள வேண்டுமென்று மாட்சிமை தங்கிய சென்னை கவர்ன்மெண்டாரை கேட்டுக்கொள்ளுவதைக் குறித்து அடுத்த ஜெனரல் மீட்டிங்கில் கவனிக்கப் பெறுமென்று கவுன்வில் தீர்மானிக்கிறது.

10-வது கான்பரன்ஸ் கணக்குகளை ஒரு வாரத்துக்குள் கொண்டுவந்து கொடுப்பதாக ஸ்ரீமான் ப. ரா. முத்துச்சாமி நாடார் அவர்கள் ஒப்பக்கொண்டதை கௌன்விலில் அங்கீகரிக்கிறது.

1927-ம் வருஷம் மார்ச்சு மீ 31 உ யோடு முடியவுள்ள இவ் வருடத்திற்கு பிரசாரகர்களை நியமித்து பழைய சந்தாக்களையும், இவ்வருட சந்தாக்களையும் தலைக்கட்டுவரியும்நன்கொடையும்வசூல் செய்வதற்கு இக்கவுன்வில்காரியதரிசிகளுக்கு அதிகாரம் கொடுத்திருக்கிறது.

சின்னமனூர் க்ஷத்திரிய வித்தியாபிவிருத்தி சங்க நிர்வாகிகள் எழுதிக்கொண்ட மனு வாசிக்கப் பெற்று அதனைச்சீர்திருத்தம் செய்வதற்காக மதுரை ஸ்ரீமான் வெ. பெ. இரத்தினசாமி நாடார் அவர்களையும் காரியதரிசி ஸ்ரீமான் பா. ம. பாண்டிய நாடார் அவர்களையும் ஒரு கமிட்டியாக நியமிக்கலாயிற்று.

வந்தனோபசாரத்துடன் இரவு 11-15 மணிக்கு மீட்டிங் முடிவு பெற்றது.

வெ. பெ. இரத்தினசாமிநாடார்
பிரஸைடிங் சேர்மன்.

---

## பர்மாவிலுறையும் ஏழாயிரம்பண்ணைநாடார்கட்கு வேண்டுகோள்.

கனவான்களே! 'திரைகடலோடியுந் திரவியந்தேடு' என்ற ஆன்றோர் வாக்கை மேற்கொண்டு சொந்த ஊரையும் பெண்டுபிள்ளை சுற்றம் முதலியவர்களையெல்லாம்விட்டு ஆயிரம் மைலுக்கப்பால் தண்ணீர்கடந்து ஜீவனோபாய விஷயமாய் பர்மாசென்று வியாபாரம் முதலியதுகள் செய்து கொண்டிருப்பது புகழ்சற்குரியதாம். இன்னும் நமது ஜெனன ஊரின் கௌரவம்பாராட்டி நம்ஜாதியின் மகிமையென்னும் மகமைபண்டு திரட்டி வைத்திருப்பதும் உங்களது குலாபிமானத்தைக் காட்டுகிறதுபற்றி சந்தோஷியா நவரிலர். சுமார் 100 பேர்கள் கொண்ட தனியாட்களாகிய நீங்கள் இவ்வண்ணம் செய்யும்போது பிறந்த ஊரிலே வீடு, பூமி செல்வம் பெண்டுபிள்ளைகளுடன் கவலையில்லாது வாழும் நம்மவர்கள் தாங்கள் கொடுக்கும் மகமையைக் கொண்டும் இவ்விடம் பிரியும் மகமையைக்கொண்டும் நமது தர்மஸ்தாபனங்களை சரியாய் பரிபாலனம் செய்வதை விடுத்து கட்சிப்பட்டிருப்பது வருந்தற்பாலதே. இன்னும் உள்ளூர் மகமையை ...திரமாய் நடத்தி அதிகவருவாயைத்தேடாதிருந்துகொண்டு அயலூர் மகமை மேல் திருஷ்டி செலுத்துவதிற் பின் வாங்குவதில்லை. ஆகையால் கனவான்களே! நீங்கள் முக்கியமாய் கவனிக்கவேண்டிய விஷயமொன்றை தங்கள் பால் சமர்ப்பிக்கின்றேன்.

நமது ஊரிலிருக்கும் கல்வியில்லாக் குறையை மற்ற ஊரார் அறிந்தால் நகையாமலிரார். நமது தலைவர்களில் சிலர் பத்திரிகை வாசிப்பதே குற்றமென்று சொல்லுவார்களானால் வேறென்ன விருக்கிறது. நம்மவர்கள் வசிக்கும் சிறு கிராமங்களிலுங்கூட சொந்த ஸ்கூல்களிருக்கும்போது சுமார் 350 தலைக்கட்டுக்கொண்ட நம்மவர்கள் வசிக்கும் நம் ஊரில் பள்ளிக்கூடமில்லாதிருப்பது எவ்வளவு கேவலம் என்பதை யோசித்துப்பாருங்கள். 'தானத்தில் சிறந்தது வித்யாதானமே' என்பது தங்களுக்குத் தெரியாததல்ல. உங்களின் தர்மம் சிறந்தோங்கவும் எப்போதும் பிரகாசித்திருக்கவும் வேண்டுமானால் உங்கள் பெயரால் நம் ஊரில் நாடார் ஸ்கூல் ஒன்று ஏற்படுத்தி நம்மக்களுக்கு கல்வியை யூட்டுங்கள். நீங்கள் திரட்டிய பணத்தை தவ்வழியில் செலவியுங்கள். பின் சந்ததியார்களுக்கு கண் திறந்தவர்களாவீர்கள். இவ்விடத்திலுள்ள பெரியோர்களுக்கு ஸ்கூல் விஷமாய் வற்புறுத்தி ஸ்கூல் ஏற்படுத்தத் தூண்டுமாறு வேண்டுகிறேன்.

கண்ணுடைய ரென்பர்கற்றோர்— முகத்திரண்டு
புண்ணுடையர்கல்லாதவர் (திருக்குறள்)

சூலாமிமானி.
ஏழாயிரம்பண்ணை.

---

## தூத்துக்குடி, ஸ்ரீமான் மா. வே. ஷண்முகவேல் நாடார் அவர்கள் ஞாபகார்த்த வாசகசாலை, காரப்பேட்டை.

### மீட்டிங் நடவடிக்கைகள்.

நமது நகர்வாசியும், பிரபல வர்த்தகரும் முனிசிபல் கவுன்சிலருமாகிய ஸ்ரீமான் தே. அ. ச. அய்யம்பெருமாள் நாடார் அவர்கள் 5-12-26ல் கூடிய கூட்டத்தில் அக்கிராசனம் வகிக்க, நண்பர் ராஜமாணிக்கத்தால் கடவுள் வணக்கம் பாடப் பெற்றது. பின் ஸ்ரீமான் வீ. வாஸ்தேவரும் அவர்கள், புஸ்தகசாலையின் நன்மைகள் என்னும் விஷயமாய் ரெம்பவிஸ்தாரமாய் உபந்யாசித்தார்கள். அதே விஷயத்தை ஸ்ரீமான் பா. சி. தெ. சா பெரியசாமி நாடார் அவர்களும் பேசினார்கள்.

நாடார் மஹாஜனசங்கம், ஏழைமாணவர் ஸ்காலர்ஷிப் பண்டை எந்தவிதமாய் அபிவிர்த்தி செய்வது உசிதம் என்ற விஷயமாய் ஆலோசிக்கப்பட்டது. ஸ்ரீமான் அரி. அ. செ. கந்தசாமி நாடார் அவர்களும் பா. செ. ரா. கூடலிங்கநாடார் அவர்களும் ஷெ பண்டு பணத்தை பாங்கில் போடவேணுமென்று எடுத்துச் சொன்னார்கள். அதை ஆக்ஷேபித்தது ஸ்ரீமான் சி. ச. மலையரசநாடார் அவர்கள் பேசி, சொத்து வாங்க வேண்டுமென்றுரைத்தார்கள். அதை ஸ்ரீமான் அ. கு. சி. த. இரத்தினசாமிநாடார் அவர்கள் ஆமோதித்தார்கள். ஸ்ரீமான் அரி. அ. சு. துரைச்சாமி நாடாரவர்களும் ஸ்ரீமான் எஸ். வ. விக்டர் அவர்களும் இது விஷயத்தை ஒத்திவைத்து நன்கு ஆலோசித்துச் செய்வது நலமென்று பேசினார்கள்.

ஷெ விஷயம் ஓட்டுக்கு விடப்பட்டதில் அதிகப்படி ஓட்டுகளால் ரொக்கமாய் தான் இருக்கவேண்டுமென்றும் இது விஷயத்தை நாடார் மஹாஜன சங்கத்தாருக்கு தந்திமூலமாய் அறிவிப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

அங்கத்தினர் சேர்ப்பதற்கும், பொதுநிதிசேகரிக்கும் பொருட்டும பதின்மூன்று பேர்களடங்கிய கமிட்டியொன்று நியமனம் செய்யப்பட்டது. ஸ்ரீமான் நா. அ. ச. தாயுமான சுவாமி நாடார் அவர்கள் ஆடிட்டராக ஏகோபித்த தீர்மானத்துடன் தேர்ந்தெடுக்கப்பெற்றார். வரும தை மீ நடைபெறவிருக்கும் வருடாந்திரக்கொண்டாட்டத்திற்கு பாளையங்கோட்டை ஸ்ரீமான் தானியேல் தாமஸ்நாடார் யம். யல். சி. அவர்களை அக்கிராசனம் வகிக்கவேணுமென்று கேட்டுக்கொள்வதாக ஏகமனதுடன் தீர்மானிக்கப்பட்டு ஸ்ரீமான் அரி. அ. சு. துரைச்சாமிநாடார் அவர்கள் வந்தனோபசாரஞ் சொல்லி அக்கிராசனரவர்களுக்கு புஷ்பகாரம் சூட்டி கூட்டம் இனிது கலைந்தது என்று காரியதரிசிகள் எழுதுகிறார்கள்.

---

## பிணியாளர் நிவர்த்தி.

நாடார் குலத்தில் ஜெனித்து இல்லற ஞானியாயுள்ள ஈசன் அருள்பெற்ற கிருஷ்ணன் என்பவர் சில நாட்களாக மதுரை, கீழமாசிவீதி நாடார் மகாஜன லாட்ஜிற்கு வந்திருக்கிறார். இவர் என்ன விதமான சிக்கையும் மந்திரிக்கும் வகையால் குணப்படுத்தி வருகிறார். ஏராளமான பிணியாளர்கள் தினம் காலை மாலை வந்து போகிறார்கள். முக்கியமாய் குருடர், குஷ்டரோகிகள் ஆகிய வர்களுக்கு சொஸ்தமாவதைத்தான் ஜனங்கள் பிரபலமாய்ப் பேசிக்கொள்கிறார்கள் என்று மதுரை ஸ்ரீமான் வ. சா. வ. சண்முகவேலுநாடார் எழுதுகிறார்.

---

## ஏழைகட்கு ஜீவனோபாயக் கஷ்டமேன்? சுய நாட்டுத் துணியை ஆதரித்து அவர்மாட்டு அவ்வேலையை காட்டுங்கள்.

---

## நாடார்களும் திருச்செந்தூரும்.

திருச்செந்தூர், திருநெல்வேலிஜில்லாவிலுள்ள ஒரு முக்கிய புண்ணியஸ்தலம். இங்கு அநேகர் சுவாமிதரிசனத்திற்கு வெகு தூரத்திலிருந்தும் வருவதுண்டு. வருஷத்தில் பல தடவை விசேஷ உற்சவங்கள் கொண்டாடப்படுவதுண்டு, ஆதியில் இவ்வாலயமும் அதின் ஆதிக்கமும் நம்மவர்களிடமிருந்தது. சுபவஞ்சகத் தனமாய் நம்மை ஏமாற்றி நம்து ஆலயத்தையும் ஆதிக்கத்தையும் பிடுங்கிக்கொண்டார்கள். அது மட்டுமல்ல நாம் சென்று சுவாமி தரிசனம் செய்துவந்த மேல வாசலையும் அடைத்துவிட்டார்கள். இதோடு விட்டுவிட்டார்களா? இல்லை. தலைமுறைதத்துவமாய் தேர்தொட்டுக் கொடுக்கும் வழக்கத்தையும் வேண்டாமென்று நிறுத்திக்கொண்டார்கள். "மதியாதார் தலைவாசல் மிதிக்கவேண்டாம்" என்றபடி இவ்வுளவு தூரம் நம்மைபுறக்கணித்து தள்ளியவர்களின் மதிக்குப் போவானேன்? சுவாமி தரிசனத்திற்குப் போகிறோம் என்று சொல்லலாம். கடவுளை ஆராதிக்க ஆலயத்திற்கு போகவேண்டும் என்பது அவசியமில்லை. தெய்வத்தை நினைத்து அமைதியான ஓரிடத்தில் உட்கார்ந்து மனதை ஒர்மைப்படுத்தி கடவுளை பிரார்த்தித்தால் தெய்வம் நமக்கு தெரிசனந்தராதா? தெய்வப்பிரசன்னமும் தெய்வகடாட்சமும் முகரூபில்பெற்ற மகரிஷிகள் எந்த ஆலயத்திற்குப் போனார்கள்? நமக்கு சுதந்திரம் சமத்துவம் இல்லாத ஆலயத்திற்கு காசைசெலவிட்டுப் பிரயாணப்பட்டுப்போய் பலவிதகஷ்டங்களனுபவித்தாலுங்கூட, கேரிய ஆண்டவனின் அருள்பெறுவதுஎம் தொன்றும் பக்தியினாலன்றி பணத்தாலாமோ! ஆகையால் நம்மனதை செம்மனமாக்கி ஆண்டவனை நினைத்து துதிசெய்திடில் எங்கிருந்தாலும் அவனருள் கிட்டாது போமோ? உற்சவதினத்தில் உன் வேலையை நிறுத்தி அமைதியான ஒரு இடத்தில் உட்கார்ந்து கடவுளை ஏன் கருதக்கூடாது? நீ வசிக்கிற கிராமத்தில் அதுபோன்ற உற்சவத்தை ஏன் நடத்தக்கூடாது. அப்படிச் செய்தால் தெய்வகடாக்ஷமும் ஆசீர்வாதமும் கிடையாதா? உற்சவத்திற்கென்று சில எளிய ஜனங்கள் அதிகமாய் கடன்வாங்கி பின்பு கொடுக்க வழியில்லாமல் கஷ்டப்படுவதும் உண்டே! ஏன் இப்பாடு? "தகுதிக்கு மிஞ்சி தாழ்ச்சியுறுவானேன்"? அப்படியே அதிகமாய் செலவிடவேணுமென்றாலும் அச்சப்பணத்தைச் சொந்த ஊரிலுள்ள ஆலயத்திற்கு ஏன் கொடுக்கக்கூடாது? ஊர் உற்சவத்தை ஏன் விமரிசையாய் நடத்தக்கூடாது? அப்படிச் செய்தால் ஊரின் நல்வாழ்வையும் க்ஷேமத்தையும் விரும்புகிறவன் எனும் பெயர் பெறலாமன்றோ!

---

## தமிழ்வைத்திய சங்க சித்த வைத்திய 3-வது மகாநாடு கண்காட்சி.

இம்மகாநாடு டிசம்பர் மீ கடைசியில் நடத்துவதாய் முன் அறிக்கை நம்பர் 3 ல் வெளியிடப்பட்டிருக்கிறது. இப்பொழுது மேற்படி மகாநாட்டுக்கு நூல்களும் வரையுரைகளும் எழுதிக்கொண்டிருக்கும் அநேக மருத்துவ சிரோன்மணிகள் தாங்கள் துவக்கிய நூல்கள் முடிவுபெற ஒரு மாதம் நீடித்து வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுவதாலும் சங்க அறிக்கை அச்சாகி முடிவு பெறாததினாலும் மேற்படி சங்க சிறப்புக் கூட்டத்தில் 1927 ளு ஜனவரிமீ கடைசியில் மூன்றாவது மகாநாடு கண்காட்சிகள் நடத்தத் தீர்மானிக்கப் பட்டிருக்கிறது. ஆதலால் சித்த வைத்தியர்கள் நூல்களையும் வரையுரைகளையும் மருந்து செய்முறைகளையும், சத்தாக்களையும் மருந்துகளையும் ஜனவரி மீ 10 உக்குள் தவறாமல் அனுப்பிவைக்க வேண்டும். மகாநாடு கூடும் தேதி பின்னால் குறிப்பிட்டுத் தெரிவிக்கப்படும். வேண்டிய விபரத்துக்கெழுதுக.

சித்த வைத்திய மகாநாடு ஆபீசு,
திருவாவடுதுறை மடம், தானப்பமுதலியார் அக்கிராரம், மதுரை.
வி. சிவஞான யோகி, அமைச்சர்.

நாடார்குலமித்திரன்
அக்ஷய ஹூ கார்த்திகை மீ உ௯வ

## தமிழ் மாகாண மகாநாடு.

மூப்பத்திரண்டாவது தமிழ் மாகாண மகாநாடு சென்னை கோக்லே மண்டபத்தில் 4—12—26-ல் இந்தியச் சட்டசபை அங்கத்தினர் ஸ்ரீமான் கே. வி. ரங்கசாமி ஐயங்கார் தலைமையின் கீழ் செல்லப் பிள்ளை திருக்கலியாணம் போல் சிறப்பாய் நடந்து திருவிளையாட்டுடன் முடிந்து விட்டது. இம்மகாநாடு தமிழ் மகாஜனங்களுக்கு எவ்வளவு சுவாரஸ்யமுடையது; எவ்வளவு நன்மைக்குரியது என்பதை நாம் அதிகமாய் விளக்க வேண்டியதில்லை. திருவண்ணாமலை, திருச்சி, காஞ்சிபுரம் முதலிய இடங்களில் இதற்கு முன்னர் கூடிய மகாநாட்டின் நடவடிக்கைகளையும், ஆங்காங்கு தலைமை வகித்து சொல்மாரி பொழிந்த தமிழ்த் தாயின் தலைப் புதல்வர்கள் செம்பாக மொழிகளையும், இம்மகாநாட்டின் இயல்புகளையும் செவ்வனே பார்த்தும் கேட்டுமுணர்ந்த எவரும் தமிழ் மகாநாட்டின் தற்கால அலங்கோலத்தை நினைத்து ஆத்திரங் கொள்ளாதிரார். இதனால் தமிழ் நாட்டுக்கு யார் தலைமை வகிக்க வேண்டும்; யார் தலைமையின் கீழ் தமிழ் நாடிருந்தால் தமிழ் மகாஜனங்கள் க்ஷேமமடைந்து தக்கோராவரென்பதும் நன்கு விளங்கியிருக்க வேண்டும். வீரமிகுந்த தமிழ நாடு ஐயங்கார் ராஜ்யமாகவா அவதிப்பட வேண்டுமென்றுத்திரப்படுவோரனந்தமே.

வரவேற்புத் தலைவர் ஸ்ரீமான் வி. எஸ். கோவிந்தராஜ முதலியார் தம்முடைய முகவுரையில் தமிழ் நாட்டின் பெருமையைச் சிறிது விளக்கி விட்டு தேர்தல் ஜெயத்திலும், பிராமணப் புகழ்ச்சியிலும் புகுந்து விட்டாரேயன்றி தமிழ் நாடு விமோசனமடையத் தக்க வழியொன்றேனுங் காட்டவில்லை. கள், கதர், தீண்டாமை மூன்றும் அவர் வார்த்தையிலிருந்து சிறிதும்வரவில்லை. பிராமண வகுப்பினர் பாரம்பரையாக தங்களுடைய புத்திசாலித்தனத்தை வளர்த்துவந்து, காலத்திற் கேற்றவரையில் நடந்து வந்திருக்கிறார்கள் என்று பிராமணரைப் பெரிதும் பாராட்டி யிருக்கிறார். இது எல்லோருக்கும் தெரிந்த விஷயமே. அவர்கள் யாரைப் பிடித்தால் தாங்கள் மேற் போகலாம்; எச்சமயத்தில் எப்படி நடக்க வேண்டும்; பேருக்கு முதலியாரைப் போட்டுக் கொண்டால் யாருக்கும் திருப்தியாயிருக்குமென்று வலை வீசுவதிற் சமர்த்தர்கள் தான். ஒரு காலியை ஒரு ரங்கசாமி காலிளைப்பில் கலக்க மாட்டார்; ளைப்பில் தொட மாட்டார்; வீட்டில் விட மாட்டார்; ராஜீய மேடையிலே கை குலுக்கி கழுத்தைக் கட்டுவார்; தோட்டக் கச்சேரியில் அணையிருந்தண்பார்; கைவி கட்டுவார்; டர்க்கித் தொப்பியுமணிவார்; கண் மறைந்தால் கடுகளவும் நினையார். இவ்வாறு யாரால் நடக்கக் கூடும்? அவர்களால்த்தான் ஆகும்; ஆட்சேபனையில்லை. நிர்வாகத்தில் பிராமணர் பெரும்பாலோராய் வந்து அவர்கள் அதிகாரத்தைத் துஷ்ப்பிரயோகம் பண்ணுகிறார்கள் என்று சொல்வதானது இதர ஜாதியினருக்கு தகுந்த சாமார்த்தியமும், புத்திசாலித்தனமும் கிடையாதென்ற அபாண்டம் கூறுவதாகிறது. அது உண்மையல்ல. ஆயினும் பகைமை பாராட்டி நிலைமையை மாற்றிவிட முடியுமா எனக் கேட்டிருக்கிறார்.

ஸ்ரீமான் முதலியார் கூறுவது உண்மையானால் இங்கிலீஷ் துரைத்தனத்தார் இந்தியர்களுக்குச் செய்யும் குறைகளை எடுத்துச் சொல்லி அவர்களதிகாரத்துஷ்பிரயோகத்தைக் கண்டிப்பது இந்தியர்களுக்குத் தகுந்த சாமார்த்தியமும், புத்திசாலித்தனமுங் கிடையாதென்று கூறுவதாகுமா? அதனாற் பகை வளருமா? அப்படியானால் நாம் வாயூமிருப்பது சாலவும் நன்றே. பிராமணரல்லாதார் முயற்சியினால் வகுப்புத் துவேஷம் வளருமென்று ஸ்ரீமான் முதலியார் கூறுவது ஒப்பத்தக்கதல்ல. அப்படியானால் பிரிட்டிஷாரிடமும், மற்றக் குடியேற்ற நாடுகளிடமிருந்தும்நாம் விடுதலை பெற வேண்டுமென்ற கிளர்ச்சியினால் வகுப்புத் துவேஷமும், பகையுந் தானுண்டாகும். அதை விட்டுவிட வேண்டியதுதான். தென்னாப்பிரிக்கா இந்தியர்கள் விடுதலையின் பொருட்டு நாளை இந்தியர்கள் ஒருக்கால் போர் தொடங்க வேண்டியது நேரிட்டால பிராமணர்கள் துப்பாக்கி தூக்குவார்களா? தெர்ப்பைப் புல்லெடுத்து விலகுவார்களா வென்று ஸ்ரீமான் முதலியார் சிந்தியாமற் போனார்.

மகாநாட்டுத் தலைவர் ஸ்ரீமான் கே. வி. ரங்கசாமி ஐயங்கார் பூர்வ பீடிகையில் ஆரம்பத்தில் தம்மைப் புகழ்ந்த பிறகு ஸ்ரீமான் ஸ்ரீநிவாசய்யங்காரைப் புகழ்ந்து கொண்டார். ஜென்மிகளின் (மலையாளம்) சுதந்திரத்தைப் பறிமுதல் செய்யும் விஷயத்தில் ஜஸ்டிஸ் கட்சியோடு அவர் கட்சியினர் சேர அவசியமில்லை யென்றார். ஏன்? ஜென்மிகள் மலையாளப் பார்ப்பனான்றோ. மலையாளப் பார்ப்பனருக்குப் பரிவு கூறின தலைவர் வைக்கம், கல்பாத்தி முதலிய இடங்களில் நடக்கும் பிராமணக் கொடுமையைப் பற்றி ஒரு வார்த்தையாவது கூறவில்லை. ஜஸ்டிஸ் கட்சியார் தான் தொண்டர்களை சிறைக்கனுப்பக் காரணஸ்தர் என்பதை மறந்து விடக்கூடாதென்று ஞாபகப்படுத்துகிறார். அப்போது ஸ்ரீமான் ஸ்ரீநிவாசய்யங்கார் என்ன செய்தாரென்பதை இவர்மறந்து விட்டார். நகரங்களிலும், கிராமங்களிலும் இருபிறப்பாளர் (பார்ப்பார்) களுக்கும், இதரர்களுக்கும் சச்சரவு இருந்து கொண்டேயிருக்கவில்லை. 6 வருஷங்களாகத்தான் அது வந்தது போல் பேசியிருக்கிறார். பிராமணரல்லாத பெருங்கிளர்ச்சிவந்த 6 வருஷங்களிற்றான் நகரங்களிலும், கிராமங்களிலும் தொடாதே; நெருங்காதே என்ற சச்சரவு ஒருவாறு தணிந்திருக்கிறது என்பதை ஸ்ரீமான் ஐயங்காரால் மறுக்க முடியாது. ஸ்ரீமான் இராஜகோபாலாச்சாரியாரே உத்தியோகம் வகித்தாலும் குடியை நிறுத்த முடியாதென்று கூறிவிட்டார். அதுதான் உண்மை. சுயராஜ்யக் கட்சியார் குடியை நிறுத்துவோமென்று இதுகாறுங் கூறியதெல்லாம் பொய் யென்று புலனாய்விட்டது. நமது மந்திரிகள் காலத்தில் பிராமணரல்லாதார் பெரிய உத்தியோகங்களை நம்பி உள்ளது உரியதை விற்று ஜாதியாசாரத் தொழிலையும் விட்டு ஆங்கிலம் படிக்க முயற்சித்தமையால் வேலையில்லாத் திண்டாட்டமுண்டானதாகச் சுட்டிக் காட்டியிருக்கிறார். பிராமண ஜாதியாசாரத் தொழிலைவிட்டு பிற ஜாதித் தொழிலைப் பிடித்துக் கொண்டமையால் இவ்வளவு அலங்கோலமும் சேர்ந்ததென்பதை ஸ்ரீமான் ஐயங்கார் விளங்க வேண்டியதைவிட்டு வேறு வழியிற் புகுந்து விட்டார். தமிழ் நாட்டில் என்று மில்லாத இந்து, முஸ்லீம் பிரசினையைப் பற்றிப் பேசியிருக்க வேண்டியதில்லை. பிராமண பிராமணரல்லாத பிரசினைப் பற்றி தெளிவாய்ப் பேசியிருக்க வேண்டும். அயல் நாட்டில் படும் இந்தியரவஸ்தைக் கிரக்கங் காட்டி ஆண்டிருவைப் புகழ்ந்தவர் உள் நாட்டில் அவஸ்தைப் படுவோருக்கு ஒரு இரக்கமும் காட்டவில்லை. பொதுவாக அவருடைய பிரசங்கம் ஒரு நடந்நை மகாநாட்டுக்குப் பொருந்துமேயன்றி தமிழ் நாட்டுக்குச் சற்றும் பொருந்தாது. மொத்தத்தில் தேசத்தை யெல்லாம் உள்ளடக்கிப் பேசினார் என்று குறிப்பிட வேண்டுமானாலும் தேசச் சீர்திருத்தத்திற்கு முக்கியமானதென்று மகாத்மா காந்தி திட்டம் போட்டு வற்புறுத்திவரும் கைராட்டினம், கதர், கள், தீண்டாமை முதலிய எந்த விஷயத்தையும் கடுகளவாவது எடுத்துப் பேசவில்லை. தமிழ் மாகாண மகாநாடு தலைவருக்குச் சென்றதால் தமிழ் நாட்டுக்கு யாதொரு பிரயோசனப்படாதென்று நன்றாய்த் தெரிந்து விட்டது. மீண்டும் தென்னாட்டிற்குத் திருப்பியழைத்திருந்தாலும் தலைமையும், தக்குமிடமும் தமிழ் நாட்டுக்கே வரவேண்டும். அப்போது தான் தமிழ் நாடு விழிப்பெய்தக்கூடும்.

இம்மகாநாட்டில் வெறுக்கத்தக்க சம்பவமொன்று நடந்திருக்கிறது. அதாவது ஸ்ரீமான் தண்டபாணி பிள்ளையை அக்கிரமமாக சபையை விட்டு வெளியேற்றச் செய்ய முயற்சித்ததேயாம். ஒன்றும் அறியாத தொண்டர்கள் தான் அக்கிரமஞ் செய்தார்களென்பதல்ல. தலைவர்களெனச் சாற்றப்பட்டவர்களும் தகாமுறையில் நடந்தார்களென்பதிற்றான் தமிழ் நாடு துடிதுடித்துக் கொதிப்படைகிறது. அவர்கள் அதிகாரத் துஷ்பிரயோகிகள் என்பதை வரவேற்புத்தலைவர் இனியாவதுணர்வாரா? இக்கொடுமையை சில பிராமணப்பத்திரிகைகள் தவிர தேசமுன்னேற்றத்திற் சிரத்தையுள்ள எல்லாப்பத்திரிகைகளும் கண்டித்தெழுதியிருக்கின்றன. நமது நவசக்தி, ஸ்ரீமான் கே. வி. ரங்கசாமி ஐயங்காரை நேரில்க்கேட்டு ஸ்ரீமான் தண்டபாணி விஷயத்தில் நடந்துகொண்டது தப்பென்று தெரிந்துகொண்டு வருந்திக்கண்டித்திருப்பதுடன் ஸ்ரீமான் தண்டபாணி விஷயத்தில் தொண்டர்களும் மற்றவர்களும் நடந்துகொண்டதவறுதலுக்கு அகில இந்தியத்தலைவர் ஸ்ரீமான் ஸ்ரீநிவாசய்யங்கார் வெளிப்படையாக வருந்தி மன்னிப்புக்கேட்கவேண்டுமென்று விண்ணப்பம் செய்திருக்கிறது. இதற்குமா வணக்கமும் விண்ணப்பமும்? ஏன் வற்புறுத்தக் கூடாது? பெருமையுடன் நவசக்தி கூறிய நன்மதிக்கிசைந்து நடத்தலே அறிவுடையோர் கடன் என்பதை அறிந்து அதன்படி நடப்பாரவென்று தமிழ்நாடு அமைதியோடு நோக்கட்டும்.

---

## குறிப்புகள்.

### தாமதத்தின் காரணம்.

இரண்டொரு வாரங்களாக நமது பத்திரிகை சிறிது தாமதப்பட்டு வெளிவநத காரணமாவது:— போஸ்டாபீஸில் கவனு ஸ்டாம்பு நமக்கு வேண்டும்போது கிடைப்பது கஷ்டமாயிருக்கிறது. சென்ற வாரத்திற்கு முந்திய வாரத்தில் விருதுநகர் போஸ்டாபீஸிலும் ஸ்டாம்பு கிடைக்கவில்லை. அப்பால் மதுரையிலிருந்து தருவித்து தபாலுக்குச் சேர்க்கப்பட்டது. சென்ற வாரதிலோ மதுரையிலும் சில நாட்கள்வரை தடவலாய் போயிற்று. தற்போது தான் கிடைத்திருக்கிறது. இனி தாமதமின்றி வெளிவரக்கூடும்.

### கவலை வேண்டாம்.

நாடார் மகாஜன சங்கம் லாட்டரியில் பிரைஸ் விழுந்த நபர்களுக்கு ஒழுங்காக பணம் அனுப்பிவருகிறார்கள். அனுப்பிவருகிறார்களென்று பன்முறையுந்தெரிவித்திருக்கிறோம். ஐந்துரூபாய் பிரைஸ்களை யெல்லாம் அனுப்பி விட்டு இரண்டு ரூபாய் நபர்களுக்கு பிரைஸ் விழுந்த வரிசைக்கிரமப்படி மணியார்டர் செய்து வருவதாக அறிகிறோம். பிரைஸ் கிடைத்தவர்களில் எத்தனை நபர்களிருக்கின்றனர்; ஒருவருக்கு எத்தனைக்கு எத்தனை மணியார்டர்கள் தான் வாங்குவார்கள் என்பதை நேயர்கள் சிறிது கவனிக்க வேண்டும். கூடிய சீக்கிரம் எல்லா நபர்களுக்கும் அனுப்பி முடியுமென்று நம்புகிறோம். ஆகையால் அவசரமும், அதனால் கவலையும் வேண்டியதில்லை.

### தக்க நியமனம்.

சென்னை சட்டசபைத் தேர்தல்களால் உண்டான பரபரப்பிலும், திருநெல்வேலியில் ஸ்ரீமான் துரைச்சாமி நாடாருக்குத் தோல்வி ஏற்பட்டுப் போனகவலையாலும், நாடார் ஜன சமூகப் பிரதிநிதியாக யாரை கவர்ன்மெண்டார் நியமனம் செய்வார்களோவென்றெதிர் பார்க்கப்பட்டது. நாடார்மகாஜன சங்கமும், பொதுவாக இரண்டுஸ்தானங்கள்வேண்டுமென்று கேட்டுக் கொண்டது. மற்றுஞ் சில கனவான்கள் அப்பதவிக்குப் பலப்ரயத்தனங்கள் பண்ணினார்கள். சமூகத்துக்கும், தேசத்திற்கும், ராஜாங்கத்திற்கும தக்கவராக ஒரு நாடார் யாராயினும் நியமிக்கப்படுவதில் நாடார் சமூகம் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்ததற் கேற்ப கவர்ன்மெண்டார் ஸ்ரீமான் சௌந்தரபாண்டிய நாடார் (பட்டிவீரன்பட்டி) அவர்களை தெரிந்தெடுத்திருக்கிறார்கள். இந்நியமனம் தக்க நியமனமென்பதை மிகுந்த சந்தோஷத்துடன் குறிப்பிடுகிறோம். அவர் யார் என்பதை நாம் அறிமுகப்படுத்த வேண்டியதில்லை. அவருடைய ஊழியமும், தியாக குணமும், குன்றா வீரமும் நாடார் சமூகத்தார் நன்றாய் அறிந்ததே. முன் மூன்று வருஷம் பாராளுமன்றத்தில் நாடார் குலப்பிரதிநிதியாகவிருந்த நமது பெருந்தகையாளர் ஸ்ரீமான் சௌந்தரபாண்டிய நாடாரையே மீண்டும் நியமனம் செய்து கொண்ட கவர்ன்மெண்டை மிகவும் பாராட்டுகின்றோம்.

தற்காலஞ் சிக்கலான கட்சி பேதங்கள் நிறைந்திருந்தாலும், நமது நாடார் சமூகப் பிரதிநிதி சமயோசிதமாக நடந்து கொண்டு நமது நாட்டுக்கும், நாடார் சமூகத்துக்கும் ஏற்ற கடமைகளை எப்போதும் யோக்யமாய் செய்து வருவாரென்று நம்புகிறோம்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection



நமது சங்க அறிக்கையும்

# எமது அபிப்பிராயமும்,

வாட்டிரி மூலமாய் நமது மகாஜன சங்கம் ஏழை மாணவர் ஸ்காலர்ஷிப்புக்கும் கிடைத்த பெருந்தொகையை எவ்வழியில் விருத்தி பண்ணுவது என்பதைப்பற்றி ஆலோசிக்குமாறு நமது பத்திரிகை வாயிலாய்க் கேட்டிருக்கிறார்கள். மதுரையில் சில சிறந்த கட்டடங்களை வாங்கி அவைகளை வாடகைக்கு விட்டு அவ்வழியாய் அதை விருத்திபண்ணுவதே உத்தமமாகும் என்றும் அத்துடன் குறிப்பிட்டிருக்கிறது. அந்த முறையானது தொன்று தொட்டு நடந்துவரும் ஓர் சிறந்த முறையேயாயினும் தற்கால வழக்கத்தின்படி பாங்கில் போட்டு வைப்பதே சாலச் சிறந்ததாகும் என்பது எமது அபிப்பிராயம். பல பெரிய பாடசாலைகளின் க்ஷேமநிதிகளை இங்ஙனமே பாங்கில் போட்டு விருத்திபண்ணி வருகிறார்கள். அன்றியும் இந்த விஷயத்தில் மற்றவர்களுக்கு இல்லாத ஒரு பெரிய சௌகரியம் நமக்கு இருக்கிறது. அது என்னவெனில் நமது நாடார் பாங்கே. இந்த பெருந்தொகையை அதில் போட்டு வைப்பதால் ஸ்காலர்ஷிப்புக்கு தகுந்த வட்டி கிடைப்பதுடன் பாங்கின் முன்னேற்றத்திற்கும் அது உதவும். அன்றியும் இவ்வாறு பாங்கை ஆதரிப்பதால் ஏற்கனவே பேசி இருக்கின்றபடி பாங்கின் லாபத்தில் விசேஷமான ஒரு பாகத்தை நமது சிறுவர்களின் கல்விப் பயிற்சிக்குக் கொடுக்கும்படி கேட்பதற்கும் விசேஷ உரிமை ஏற்படுகின்றது. மேலும் முன்னமே சங்கம் பாங்கு விஷயமாய் அவ்வளவாக சிரத்தை எடுக்கவில்லை என்று குறை சொல்லப்பட்டிருக்கிறது. சேட்டுமுடியும் வரைக்கும் அவ்வப்போது வந்த தொகைகளை நமது பாங்கில் போட்டு வைக்காது வேறு பாங்கில் போட்டு வைத்ததானது நமது மகாஜனங்களுக்குள் பாங்கின் பேரில் ஒரு சிறு அவநம்பிக்கையை உண்டு பண்ணத் தூண்டியதாகும். வேறு சில பெரியமனிதர்களும் அவ்வாறு நடந்துகொண்டிருப்பது விசனிக்கத்தக்கது.

இவ்வாறு மேற்சொல்லிய முறையில் நமது மகாஜன சங்கமே பாங்கை ஆதரிக்க முற்படும்போது பொதுஜன அவநம்பிக்கை மாறி பாங்குக்கு விசேஷித்த முன்னேற்றமும் ஸ்காலர்ஷிப் தொகைக்கு விசேஷ வளர்ச்சியும் உண்டாகுமென்பது எமது தாழ்மையான அபிப்பிராயம். நமது சங்க உத்தியோகஸ்தர்களும், மற்றும் நமது குலப் பெரியோர்களும் இதனைச் சீர் தூக்கிப் பார்ப்பார்களாக.

பி. விசுவாசம்நாடார்.
பாளையங்கோட்டை.

## பொறுப்பற்ற தன்மை.

பிராமணரல்லாத பெருந்தகையார் சுயதேசத்திற்கு தம் வாழ்நாட்களை அர்ப்பணஞ் செய்த தியாக வள்ளல்—மகாத்மா காந்தி ஆணை வழி நின்று அரசாங்கத்தில் சிறை வாசம் பூண்ட தீரர்—பக்ஷபாதமாவது, அச்சமாவது இல்லா ஆண்டகைமை யுள்ளார்—தமிழ்த்தாயின் தவப்புதல்வர் ஸ்ரீமான் தண்டபாணி பிள்ளை சென்னைத் தமிழ் மாகாண மகாநாட்டில் தொண்டர்களால் அநியாயமாய்த் தாக்கப்பட்டிருக்கிறார். ஆங்குள்ள ஐயங்கார் கூட்டத்தார் அக்கிரமமாய் அவரை அடித்துத் துன்புறுத்திய போதிலும், அவர் வீரங்குன்றாது யாவரையும் பொருட்படுத்தாது தமதுரிமையைப் பாதுகாத்துக் கொண்டது குறிப்பிடத்தக்கது. அகில இந்தியத் தலைவரெனச் சொல்லும் ஸ்ரீமான் ஐயங்காரும் பொறுப்பற்ற தன்மையாய் நடந்தனரென்று கேள்விப்பட்டு மிகவும் விசனிக்கிறோம். ஸ்ரீமான் பிள்ளை யெழுதிய கடிதம் பிரசுரிக்கப்பட இடமின்மையால் மறுமுறை வெளிவரக்கூடும்.

## காலப்போக்கு.

சன்மார்க்க வியாதிகளைக் கடுக்கச் சுகாதாரமகாநாடுகள் கூடுகிறதிலிருந்தும் மாகாண அதிபதிகள் உபதேசமும் உதவியும் செய்து வருவதிலிருந்தும் அவ்வியாதிகள் அதிகம் பரவி வருகின்றனவென்றறியலாம். துன்மார்க்க வியாதியைத் தடுப்பதற்கு மகாத்மா காந்தி கூறும் சன்மார்க்கமுறை தக்க மருந்தாகும்; இதுவே அதைத் தடுக்கும்.

• •

வேலூரில் கூடிய ஆந்திர மகாநாட்டில் ஸ்ரீமான் சாம்பமூர்த்தி தேசியக்கொடியை ஏற்றினர். சென்னையிற் கூடிய தமிழ் மாகாண மகாநாட்டில் ஸ்ரீமான் சத்தியமூர்த்தி தேசியக்கொடியை ஏற்றினர். இனி சேகப்பெருமகா சபையில் எந்த மூர்த்தி அந்தக்கொடியை ஏற்றுகிறாரோ தெரியவில்லை. எம்மூர்த்தி எக்கொடியேற்றினும் ஸ்ரீமான் சாம்பமூர்த்தி கூறியபிரகாரம் அக்கொடியின் தத்துவம் இன்னதென உணர்ந்தாலன்றி மும்மூர்த்திகள் கொடி ஏற்றினாலும் அது மடத்தாண்டிகள் கொடிபோற்றான் மதிக்கப்படும். ஆகவே கொடியின் தத்வத்தை நமது தலைவர்களாவது சரிவர உணர்ந்து நடக்கவேண்டும்.

• •

புதுக்கோட்டைக்குள் வராமல் இரண்டு வருஷமாகத் தடுக்கப்பட்டிருந்த ஸ்ரீமான் சத்தியமூர்த்தி தடையகற்றி இவ்வாண்டு அம்மகாநாட்டின் தலைமை வகித்து அருமையான பிரசங்கம் செய்தன்னார். அவர் அந்நாட்டிற்பிறந்தமையால் தாய் நாட்டிற்பக்தி பூண்டு தலைவரென்ற ஹோதாவில் சிறிதும் தாட்சண்யமின்றி அந்நாட்டரசமுறையிலுள்ள குறைகளை கண்டித்துப் பேசியிருப்பது குறிப்பிடத்தக்கது.

• •

சென்னை மாகாணத்தில் பழய மந்திரிகள் நியமனமாவதற்கு வழியில்லாமற் போனாலும் மீண்டும் பிராமணரல்லாதவர்களே புதிய மந்திரிகளாகவந்தது பற்றி தமிழ்நாடு மிகுந்த சந்தோஷமடையலாம். பழய மந்திரிகள் தமிழ்நாட்டை மலைமேலேற்றிவைத்தார்களென்று கூறினும் சிறிது குறையும் கூறப்படுகிறது. அக்குறைகளையெல்லாம் புதிய மந்திரிகள் மாற்றிவிடுவதுடன் பெரும்பாலோரான பிராமணரல்லாத சமூகம் நன்கு பிழைக்கவும் வழிகாட்டுமென்று தமிழ்நாடு எதிர்பார்க்கிறது.

• •

சென்னை டெப்டி போலீஸ் சூப்பிரண்டெண்டெண்ட் ஸ்ரீமான் எம். எஸ். ராமசாமி ஐயர் பச்சையப்பன் கலாசாலையில் சரித்திரசங்க ஆதரவில் செய்தபிரசங்கத்தில், ஸெயின்ட்பாலின் தமிழ் சிலேடை என்ற விஷயத்தில் பாலஸ்தீனம் தமிழர் குடியேறிய இடமென்றும் ஏசுநாதர் தமிழர் என்றும் கிறிஸ்துமதம் தமிழரின் சீர்திருத்த இயக்கமென்றும் ஸெயின்ட்பால் ஆங்கு குடியேறிய இந்தியரென்றும் அவர் பிராமணரென்றுங் கூறியுள்ளார். ஏசுநாதரும் பிராமணரென்று சொல்லிவிட்டால் எல்லாம் பிராமணமயமாய் விடுமன்றோ!

• •

நமது ஆசார்யராய் அவர்கள், கைராட்டினத்தை ஆண், பெண், சிறுவர், சிறுமிகள் யாவரும் எளிதிற்சுழற்றலாம்; பெண்கள் குழந்தைகளுக்குப் பால் கொடுத்துக்கொண்டே நூல் நூற்கலாம்; இத்தொழிலே நமது நாகத்தைத் தணிக்கும்—ஏழைகளைக் காப்பாற்றுமென்று நம்தாய் நாட்டுக்கும் பறை சாற்றி வருகிறார். நம் நாட்டுச் சீமான் வீட்டுச் சிறுகுழந்தைகளின் விளையாட்டுச் சாமான்களோ உபயோகமில்லாத அந்நியநாட்டுச் சிறு ஊது குழல், ரப்பர்குருவி, ரெயில்வண்டி, மோட்டார், ஆகாயக்கப்பல் முதலியன. அவைகள் சிறிது கெட்டுப் போனாலும் குப்பையிலெடுத்தெறியக் கூலிகொடுக்க வேண்டும். பெரிய நகரங்களில் உலாத்துவதற்கு பெண்களும் மோட்டார் ஓட்டக் கற்றுக் கொண்டிருக்கிறார்கள், இந்நிலைமையில் பாட்டிகள் சுழற்றிய ராட்டின நாதம் எங்ஙனம் சப்திக்கும்? அந்தோ! நாட்டின் ஆடம்பரமே நீ சற்றே விலகியிரு; நாட்டின் வறுமை தொலைபட்டும்.

• •

ஆஸ்டிரேலியா சென்றிருந்த ஸ்ரீமான் ஆர். கே. ஷண்முகஞ்செட்டியாரவர்கள் இந்தியாவின் உண்மையான பிரதிநிதி என்பதை ஆங்கு நிரூபித்துவிட்டார். இந்தியர்பேரிலுள்ள தப்பெண்ணங்களைமாற்றி, சகோதரத்வத்தைப் பெருக்கி தமிழ் நாட்டின் பெருமையை அடைந்து, கொழும்பில் நக்கோர்களால் வரவேற்கப்பெற்று நம் தாய்நாடு வந்து சேர்ந்ததை சந்தோஷத்துடன் வாழ்த்தி வரவேற்கின்றோம். அவர் தேகபலத்துடன் செஞ்சீவியாயிருக்க வேண்டுமென்று கடவுளைப் பிரார்த்திக்கின்றோம்.

• •

சென்னைசட்டசபை மெம்பர் சாமி வெங்கடாசலம்செட்டியார் கொஞ்சநாளைக்கு முன்புகூட ஹிந்துதேவஸ்தான மசோதாவை ஆதரித்திருந்தார். இப்போது உடுப்பியில் கூடின இந்து தேவஸ்தான மசோதாகண்டன மகாநாட்டில் தலைமை வகித்திருக்கிறார். இம்மசோதாவினால் பனகால்ராஜா தோற்றுப்போனதாக மட்டும் சொன்னதாக வெளிவந்திருக்கிறது. தேவஸ்தான மசோதாவால் பனகால் தோல்வியுற்றாரென்றால் சாமி வெங்கடாசலம் கார்பொரேஷன் தலைவர் தேர்தலில் எதனால் தோல்வியுற்றாரென்பது விளங்கவில்லை. அத்தோல்வியின் பிறகுதான் சாமி மனம் மாறியிருக்குமோ தெரியவில்லை. எதேனும் இதில் ஒரு ரகஸ்யமிருக்கத்தான் வேண்டும்.

• •

தமிழ் மாகாண மகாநாட்டுத்தலைவர் ஸ்ரீமான்கே.வி.ரெங்கசாமிஐயங்கார் தமதிப்புவாய்ந்த நண்பர் ராஜகோபாலாசாரியார் சுயராஜ்யக்கட்சியார் உத்தியோகமேற்றால் குடியை நிறுத்திவிடக்கூடுமென்று நினைக்கிறார். ஆனால் இப்போதுள்ள நிலைமையில் அவரே உத்தியோகம் வகித்தாலுங்கூட சாத்தியப்படாதென்றும், கவர்ன்மெண்டுகுறுகிய சேர்க்கம ஒழியாதவரையில் ஒன்றும் செய்யமுடியாதென்றுங்கூறியிருக்கிறார். இவ்வபிப்பிராயத்தை இரண்டொரு மாசங்களுக்கு முன் இவர் தெரிவித்திருக்கக்கூடாதா? சுயராஜ்யக்கோஷ்டிகளை அதிகமாய்த் தெரிந்தெடுத்தும், பாழுங்குடியொழிக்க முடியவில்லையே என்று ஜனங்கள் பின்னர் குறைகூறு வண்ணம் செய்து கொள்ளும் பாதுகாப்பேயாகும். எத்தனை ஐயங்கார் ஆச்சாரியார் சாஸ்திரியார் மூர்த்திகள் சட்டசபைக்குச் சென்றாலும் குடியை ஒழிக்க அவர்களால் ஆகாதென்பது நிரூபணமாகிவிட்டது. ஆறுவருஷங்களாக குடியை ஒழிக்க ஜஸ்டிஸ்கட்சி ஆட்களால் ஆகவில்லையென்று அபாண்டமான பழியை அவர்கள் தலையிலேன் அதிகம் சுமத்தவேண்டும்? சுயராஜ்யக்கட்சியின் உண்மைச் சொரூபம் வரவரத்தெரியும்.

• •

தற்காலம் வேலையில்லாத கஷ்டங்களை யொழிப்பதற்கு ஆடம்பரமற்ற வாழ்வே சுகவாழ்வு. அதுவே கஷ்டங்களை யொழிக்குமென்ற தத்வம் சென்னையில் பிரசங்கம்செய்த ஆச்சாரியாரின் பிரசங்கத்தில்தொனிக்கின்றது. தமிழ் மாகாநாட்டுத்தலைவர் ஸ்ரீமான் ஐயங்கார் வாக்கிலே வகுப்புத் துவேஷம் மலிந்து விளங்குகிறது. வேலையில்லாத்திண்டாட்டத்தைப் பற்றிக் கூறுமிடத்தில் வகுப்புவாத மந்திரிகளால் சலுகை ஏற்பட்டவகுப்பினர் பெரிய உத்தியோகம் கிடைக்குமென நம்பி தங்களுக்கு ஜாதியாசாரத்தால் ஏற்பட்ட தொழிலையும்விட்டு ஆங்கிலக் கல்வியில முயற்சித்தனர் என்கிறார். ஆங்கிலப்பயிற்சியையும் அதனால் வரும் உத்தியோகத்தையும் ஊதியத்தையும் பிராமணரல்லாதார் அடைவது அவர்கள் ஜாதியாசாரத் தொழிலல்லவென்றும், பிராமணர்களே அதற்குப் பிறந்த மக்களென்றும் ஸ்ரீமான் ஐயங்கார் கருதுகிறார் போலும்.

• •

சுயராஜ்யக்கட்சியோர் சட்டசபையில் பெரும்பாலோர் வந்தால் குடியையொழித்து விடலாமென்று ஸ்ரீமான் ராஜ கோபாலாச்சாரியார் தம்பட்டமடித்தார். மரங்களை வெட்டியெறிந்தாலன்றி இந்தியாவில் குடியொழியாதென்று கண்டாவில் ஸ்ரீமான் விஜயராகவாச்சாரியார் பறையடித்தார். நண்பர் ராஜகோபாலாச்சாரியாரே உத்தியோகமேற்றாலும் குடியையொழிக்க முடியாதென்று ஸ்ரீமான் கெ. வி. ரங்கசாமிஐயங்கார் பிரகடனம் செய்துள்ளார். மற்றய்யங்கார் கோஷ்டிகள் ......

## தமாஷ் பேச்சு.

(உப. சி. மா. சாயப்ப நாடார் எழுதுகிறார்.)

எஜமான்—(தோட்டக்காரனை நோக்கி) கருப்பா! இந்த ஊர் பொல்லாத ஊர்; ஆனதினால் எல்லாவற்றிற்கும் சுடு தண்ணீர்தான் உபயோகிக்கவேண்டும்.

கருப்பன்—நல்லது எஜமானுங்கோ.

எஜமான்—(ஒரு நாள் எஜமானன் பூமரங்கள் வாடிப்போகின்றனவே காரணம் என்னவென்று பார்க்கும்போது தோட்டக்காரன் செடிகளுக்கு சுடுதண்ணீர் பாய்ச்சிக்கொண்டிருந்தான்) கோபத்தோடு அடே! கருப்பா என் சுடுதண்ணீர் ஊற்றுகிறாய்? மரங்கள் வாடிப் போகின்றனவல்லவா?

கருப்பன்—எஜமான் தானே சொன்னீங்க. எல்லாத்துக்கும் சுடுதண்ணீர்தான் பாவிக்க வேணுமென்று; அதனால்தான் நான் ஊத்தினேங்கோ.

---

உபாத்தியாயர்?—ஊக்கமது கைவிடேல் என்றால் இதன் பொருளென்ன?

மாணவன்—ஊக்கம்—உற்சாகம், மது—கள், கைவிடேல்—விட்டுவிடாதே. உற்சாகம் எடுத்த கள் குடிப்பதை விட்டுவிடாதே.

---

முதலாளி—உனக்கு என்னசம்பளம் வேண்டும்?

வேலைக்காரன்—என் வேலையைப் பார்த்து சம்பளம் கொடுத்தால் போதும்.

மாதம் முடிந்ததும் வேலைக்காரன் முதலாளி! சம்பளம் கொடுங்கோ என்றான்.

முதலாளி—நீ வேலை சரியாய் செய்யவில்லை. உனக்கு சம்பளம் கொடுக்கலாகாது. விருப்பமில்லையாகின் விலகிக் கொள்ளலாம்.

---

ஒரு பெரியவர் தான் ஒருவரோடும் பேசக் கூடாதென்று வானத்தில் கண்களிரண்டையும் மூடிக்கொண்டு கடவுளைக்காண வேணு மென்று தபசு செய்துகொண்டிருந்தார்.

வழிப்போக்கன்—ஐயா பெரியவரே! என் இவ்வாறு கண்களை மூடிக்கொண்டிருக்கின்றீர்?

பெரியவர்—அப்பா நான் ஒருவரோடும் பேசக்கூடாது. தொந்திரவு செய்யாமல்ப் போய்விடு.

---

மௌனம்சாதிக்கின்றன. ஐயங்கார், ஆச்சாரியார் வார்த்தைகளை நேயர்கள் ஆழ்ந்தாராயவேண்டும்.

• •

“பணம் பத்தும் செய்யும்” என்பது கொண்டு அத்தனையே சம்பத்து பெறுவான் கருதி எதையும் ஆற்றத்திடங்கொண்ட நெஞ்சினர் உலகில் மலிவு. இம்மலிவினர் கோரிப் புரியும் கருமத்தால் நாளை விளையும் பயனென்னவென்பதை சற்றே யுணர்வதில்லை. உணர்வு குன்றி நடத்தும் இக்கட்டுகளால் கடையில் பெரும் அவதிக்குள்ளாக்கப்படுவாரென்பதை அறியார் போலும். ஆசையான் ஆண்டவனருளியவை நமக்குக் கிட்டுமென்பதை யோர்ந்து அது குறித்து எத்தகைய பழிச் செயல்களுக்குமிடந்தராது சத்வழிகளில் முயற்சி குன்றாதிருத்தலே மேன்மக்கள் கடமையாம். இந்நல்வழியின்றி அல்வழி புக்கிய ஓர் மாதின் செயலை இங்கு தருகின்றோம். நல்லகொண்டா ஜில்லாவைச் சேர்ந்த ஸ்ரீமதி ராதம்மா என்னும் ஸ்திரீ தானெடுத்த ஒரு புதையல் தன் கை தவறுதிருக்கும் அவசரத்தால் சிலரின் போதனைக்குட்பட்டு அப்புதையல் எடுத்த ஸ்தலத்தில் 18 மாதக் குழந்தையொன்றை நரபலி கொடுத்து சவத்தை அவ்விடத்தே புதையல் செய்தனளாம். இதை அறிந்த போலீஸார் மாதைக் கொலைக் குற்றம் சாட்டி விசாரணை நடத்தி வருகின்றனராம். கொலைக் குற்றம் புதையலோடு போமோ; மாதின் தலையோடு தான்போமோ!

ஸ்ரீ நாடார்குல மித்திரன். 1916 டிசம்பர் மீ 13 உ

## பஞ்சமால்தாலுகா.

### மண்மலைகளும் பிரயாணங்களும்.

இந்தியாவின் தென்கோடியில் பஞ்சமால்காடு, நாஞ்சில் காடு என்னும் இருநாடுகளில் நாஞ்சில் நாடானது திருவாங்கூர் சமஸ்தானத்தைச் சேர்ந்து நீர்வளம் நிலவளம் மிகுந்து ரோடு, ரெயில் முதலிய பிரயாண சௌகரியங்களுடன் கூடியதாயிருக்கின்றது. பஞ்சமால்நாடானது பூர்வகாலத்தில் இருந்த மேன்மை, குறைவாகியிருப்பதாகவே தெரிகிறது. பஞ்சமால் நாடென்பது 1 சொற்கை, 2 வீரபாண்டியன்பட்டணம், 3 ஆள்வார்திருநகரி, 4 வாகுணகரி 5 குலசேகரபட்டணம் ஆகிய இவ்வைந்து ஸ்தலங்களையுடைய நாட்டிற்கு பஞ்சமால் நாடென்று பெயர். 1874-ம் வருடத்தில் வின்பிரட் ஐயர் அவர்கள் அச்சிட்ட சான்ரோர் மரபுகாத்தல் என்னும் புஸ்தகத்தில் பஞ்சமால் என்ற பெயர் வந்தகாரணமும் இவ்விதமே கூறியுள்ளார். இந்தப்பஞ்சமால்வழுதிநாட்டைநம் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் பஞ்சமால்த்தாலுகாவென்றே வைத்திருக்கிறார்கள். அதாவது இப்போதிருக்கும் திருச்செந்தூர்தாலுகா முழுவதும், ஸ்ரீ வைகுண்டம்தாலுகா கீழ்பாதியும், நாங்குநேரிதாலுகா தென்பாதியும், பஞ்சமால்நாடு,பஞ்சமால்த்தாலுகாஎன்னும் பெயராம். இந்தப் பஞ்சமால்நாட்டில் உலகத்தில் ஒரு இடத்திலும் கிடையாத மண்மலைகளும் பொயகைகளும் உண்டு. போக்குவரத்திற்கு நல்ல ரஸ்தாக்களும் சாலைகளும் உள்ள இந்நாட்டில் தற்காலப்பிரயாணங்களுக்கேற்ற ரோடு ரெயில் டிராம்லேன் இல்லாததினால் ஏற்பட்ட பிரயாணக் கஷ்டத்திற்கு அளவில்லை. நாஞ்சில் நாட்டில் இருந்து திருச்செந்தூர் சுப்பிரமணியசுவாமி சன்னதிக்குவருவார் ஒரு கோடி; இங்கிருந்து அங்கு செல்வார் ஒருகோடி. இந்தப்புண்ணிய க்ஷேத்திரப் பிரயாணங்களுக்காக வகுப்பட்டிருந்த சாலைகளும் ரஸ்தாக்களும் முட்காடாகிவிட்டன. மண்மலைகளென்னும் தேரிகளில் நிழலே கிடையாது. வெயில் மழைபொறுக்க முடியாமல் ஜனங்கள் படும்கஷ்டத்திற்களவில்லை. வண்டிகள் போக்குவரத்து நின்றுவிட்டது. ஆதலால் திருச்செந்தூரிலிருந்து நாகர்கோவில் வரைக்கும் இருப்புப்பாதை—1 திருச்செந்தூர், 2 மேலத்திருச்செந்தூர், 3காயாமொழி,4குதிரைமொழி,5மானாமெய்ஞ்ஞானபுரம், 6 நங்கைமொழி, 7 சாத்தான்குளம், 8 இட்டமொழி, 9 னஞர்புரம், 10 முட்டைக்குளம், 11 கும்பிகுளம், 12 கருங்குளம், 13 சமரங்கபுரம்,14 வேப்பிலாங்குளம், 15 பெருங்குடி, 16 காவல்கிணறு, 17 ஆரல்வாய்மொழி கோட்டை வாசல் வழியாய் நாகர்கோவிலுக்கு இருப்புப்பாதை போடும்படி நம் காருண்ய கவர்ன்மெண்டாரைக் கேட்டுக்கொள்ளும்படி ஆங்காங்குள்ள கனவான்களை வேண்டுகிறேன். திருச்செந்தூரிலிருந்து குலசேகரபட்டணத்திற்கு இருப்புப்பாதை போடவேணுமென்று டிஸ்ட்ரிக்ட்போர்டில் ஆலோசனைசெய்யும்போது ஒரு பந்தலு மீட்டிங் தினமெல்லாம்பழைய டிராம்லேன பாதையாய் போடவேணுமென்று பேசி கடைசியாய் முடிவான தினத்தில் கடற்கரைபாதையாய்த்தான் போடவேணுமென்றார். குலசேகரபட்டணத்தில் செல்வாக்குள்ள ஒருபிள்ளையவாள் நாடார்கள் இருக்குமிடத்திற்கு ரயில் எதற்கு, கடற்கரைபாதையாய்த்தான் போடவேணுமென்றார். பந்தலுவும் பிள்ளையும் ஒன்று சேர்ந்தாற்போல் சேர்ந்து இன்னும் நாடார்களுக்கு எதிரியாய் வருவார்கள் பலர். ஆகையால் நாடார்களும் மற்றும் கனதனவான்களும் விசேஷ சிரத்தையெடுத்து திருச்செந்தூரிலிருந்து 47 மைல் நீளமுள்ள இவ்விருப்புப்பாதையைப்போட்டு முடிக்க கவர்ன்மெண்டாரைக்கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

### டிராம் லேன்.

தற்காலம் இப்பஞ்சமால்நாட்டில் 26 மைல் தூரம்தான் டிராம்லேன் பேரிஅண்டு கம்பெனியாரால் போடப்பட்டிருக்கிறது அந்த லேன் முடிவாகியிருக்கிற திசையன்விளையிலிருந்து கூட்டங்குளம் பாதையாய் அஞ்சுகிராம் கோட்டைவரையிலும் டிராம்லேன் போட்டுவிட்டால் கன்னியாகுமரிக்குப்போகும் பிரயாணிகளுக்குப் பேருபகாரமாகும்.

### தூத்துக்குடி குலசேகரபட்டணம் டிராம்லேன்

ஒன்றுபோடவேண்டியதிருக்கிறது. ஷை லேன் வர்த்தகத்திற்சிறந்துவிளங்கும்தூத்துக்குடிநகரத்திற்குச்செல்லும் வியாபாரங்களெல்லாம் தலைச்சுமைகளினாலும் வண்டிகளினாலும் கொண்டு செல்லப்படுகின்றன. தாம்பரவருணியாற்றில் வெள்ளம்வந்தகாலத்தில் இவ்வியாபாரங்களெல்லாம் தடைப்படுகின்றன. பிரயாணிகள்,ஏறலில்சேர்மன்கோயிலுக்குப்போகும் ஜனங்கள் மழைகாலத்தில் வெகு கஷ்டத்தை அடைகிறார்கள். பரமன்குறிச்சி, தண்டுபத்து, உடன்குடிமுதலிய இடங்களிலிருந்து தலைச்சுமையாகத் தூத்துக்குடிக்குச் செல்லும் வெற்றிலைச்சுமைகளுக்கெல்லாம் பெரும் கஷ்டத்தையுண்டாக்குகிறது. ஆகையால் தூத்துக்குடி துறைமுகத்திலிருந்து குலசேகரபட்டணம் துறைமுகம்வரைக்கும் டிராம்லேன் 1 தூத்துக்குடி, 2 கூட்டாமொழி, 3 பெருங்குளம், 4 ஏறல், 5 சேதுவாய்க்கால், 6 குரும்பூர், 7 காயாமொழி, 8 பரமன்குறிச்சி, 9 தண்டுபத்து, 10 உடன்குடி, 11 குலசேகரபட்டணம் இப்பாதையாகப்போட்டால் சேர்மென் சுவாமி கோயிலுக்குப்போகிறவர்களுக்கும் வியாபாரிகளும் பிரயாணிகளுக்கும் பெரும்லாபத்தையும் சௌகரியத்தையும் உண்டாக்கும் என்பதிற் சந்தேகமில்லை. ஆகையால் ஆங்காங்குள்ள கனவான்களும் கிராமப்பஞ்சாயத்தார்களும் தூத்துக்குடி டிராம்லேனைப் போடும்படி டிஸ்ட்ரிக்ட் போர்டாரைக் கேட்டுக்கொள்ளும்படி வேண்டுகிறேன். சுபம்!

அ. சுந்தரக்குமார் ஆதித்தநாடார்,
காயாமொழி.

---

## மீண்டும் யுத்தம் உண்டாகுமா?

### தேசங்களின் நிலைமை.

நாம் பத்திரிகை படிப்பதைப் பார்க்கும் ஜனங்கள் பல சமயங்களில் ஐயா யுத்தச்செய்திகள் எப்படியிருக்கின்றனவென்று விசாரிக்கிறார்கள். லார்டு அஸ்குவித் பிரதம மந்திரியாயிருந்தபோது பயங்கரமான சம்பவங்களைக் கேள்விப்படுவதில் சிலருக்கு இயற்கையாய் ஓர் வித சந்தோஷம் ஏற்படுகிறது என்று சொன்னது ஒருவாறு உண்மையென்றே இது ருஜிப்பிக்கிறது. ஆயினும் சென்ற யுத்தத்திற்குப்பின் வேறு யுத்தம் நேராமற்பாது காக்கவே பெல்ஜியத்துக்காக வேண்டி ஜீவகாருண்யம் தர்மம் சத்தியம் முதலிய சிறந்த லக்ஷணங்களை நிலைநாட்டுவதற்காகப் பல பெரிய தேசங்கள் ஜெர்மனிக்கெதிரே யுத்த சன்னத்தராய் நின்றனர் என்று கூறப்பட்டது. ஆனால் யுத்தம் முடிந்து சமாதான உடன்படிக்கைகளெல்லாம் தயாரான வுடனே மற்றோர் பெரிய யுத்தம் உண்டாவதற்கு இது ஓர் சிறிய ஆயத்த யுத்தம் என்று பலரும் அபிப்பிராயம் வெளியிட ஆரம்பித்தனர். என்றாலும் ஆயுத பலத்தைப் பெருக்காமலிருக்கவும், தேசங்களுக்கிடையே உண்டாகும் மனஸ்தாபங்களை யுத்தமின்றி சமாதானமாய் முடிவு செய்யவும் சர்வதேச சங்கங்களும் மஹாநாடுகளும் ஏற்பட்டு உலகில் யுத்தம் ஏற்படாமல் தடுத்து விடப் போவதாகவே புகன்று வருகின்றன. மற்றோர் வகையினரோ இச்சங்கங்களெல்லாம் பெலவீனமான ஜனங்களை ஏமாற்றி தம்முடைய ஆதிக்கத்தையும் செல்வாக்கையும் பெருக்கிக் கொள்ள நினைக்கும் பேராசை பிடிக்க இரண்டொரு தேசங்களின் சூழ்ச்சியேயன்றி உண்மையான சமாதானத்துக்காதாரமானவையல்லவென்று கூறுகிறார்கள். இக்காரணம் பற்றியே அமெரிக்கர் இச்சர்வதேச சங்கத்தில் இதுவரை சேரமறுத்துவருகின்றனர். இந்தியாவும் சர்வதேச சங்கத்தில் ஒரு மெம்பர் என்பதை நினைக்கும் போதே இச்சங்கத்தின் உண்மையான நிலைமையும் லக்ஷியமும் இன்னதென்பது யூகிக்கக் கூடாததன்று. ருஷ்யாவும் துருக்கியும் இன்னமும் ஷை சங்கத்தில் மெம்பர்களாகவில்லை. சகல தேசங்களும் யுத்தாயுதங்களைத் தாராளமாய் அதிகரித்துக் கொண்டுதான் போகின்றன. ஜெர்மானியர்களுங்கூட வர்சேல்ஸ் உடன்படிக்கைக்கு விரோதமாக ஆயுதங்களை விர்த்திசெய்வதாகவும் கோட்டைகளைக் கட்டுவதாகவும் புகார்சொல்லப்பட்டுவருகிறது. ருஷியர் உலகமெல்லாம் சுற்றுப்பிரயாணம்செய்து ஆங்கில ஆதியைச் சிதைவு பண்ணக் கூடிய சகல சூழ்ச்சிகளையும் தந்திரங்களையும் கையாண்டு வருவதாக அடிக்கடி பிரஸ்தாபமேற்படுகிறது. கீழ்திசையிலுள்ள தேசங்களெல்லாம் ஒன்றோடொன்று நெருங்கிய சம்பந்தமுடையனவாய் சிநேகப் பான்மையுடன் கூடிய உடன்படிக்கைகள் செய்துகொண்டு வருகின்றன. ஆப்கான்ஸ்தானம், ஜெப்பான் முதலிய தேசங்களுடன் தங்களுக்கேற்பட்டிருந்த உடன்படிக்கை முடிவடைந்தபோது அதைப் புதுப்பித்துக்கொள்ள இங்கிலாந்து மறுத்துவிட்டது. அதன் ஸ்தாபனத்தில் ருஷியாவுடன் ஆப்கானிஸ்தானம் உடன்படிக்கை செய்துகொண்டிருக்கிறது. ஜப்பானின் நிலைமை அதிகக்கவலையுடன் கவனிக்கப்பட்டு வருகிறது. கீழ் திசைகளின் நிலைமை இவ்வாறிருக்க, மேல் திசை தேசங்களை நோக்குவோமானால் ஜெர்மானியர்கள் விஷயமாய் இங்கிலாந்தும் அமெரிக்காவும் ஒரு வித அபிப்பிராயமும் கொள்கையுமுடையனவாய் விளங்க, பிரான்ஸ் எப்போதுமே ஷை இரு தேசங்களுடனும் மேற்சொன்ன விஷயத்தில் பேதமான அபிப்பிராயமுடையதாகவே விளங்கி வந்திருக்கிறது. இத்தாலியின் அவதார புருஷனென்று சொல்லிக்கொள்ளும் முசோலனி என்பவர் மத்தியதரைக்கடலிலும் அதற்கப்பாலுள்ள ஆப்பிரிக்காக்கண்டத்திலும் இத்தாலியின் ஆதிக்கத்தை நிலைநிறுத்த வெகு பயமுறுத்தலான பாஷையையும் நடபடிகளையும் வழங்கிவருகிறார். சமீபத்தில் ஸ்பெயின்தேசத்தோடு இவர் செய்து கொண்டிருக்கும் உடன்படிக்கை இங்கிலாந்தில் ஓர்வித பரபரப்பை உண்டுபண்ணி வருகிறது. இவ்வித நிலைமையில் ஆப்பிரிக்காக்கண்டத்தில் தாங்கள் இழந்து போன பழைய நாடுகளை தங்களுக்குத் திரும்பத் தரும்படி ஜெர்மானியர் சர்வதேச சங்கத்துக்கு விண்ணப்பம் பண்ணிக் கொண்டிருக்கிறார்கள். இதற்காகவே அவர்கள் ஷை சங்கத்தில் சமீபத்தில் மெம்பராகியிருக்கிறார்கள்.ஜெர்மானியர் சர்வதேச சங்கத்தில் சேர்ந்தபின் ஷை சங்கத்தைச் சேராத ஏனைய தேசங்கள் உடன்படிக்கை ஒப்பந்தங்கள் செய்து கொள்வதில் பிரயோசனமில்லையென்று துருக்கிய அங்கியநாட்டு மந்திரி சமீபத்தில் கூறியுள்ளது துருக்கியும் சர்வதேச சங்கத்தில் சேர்ந்து மேல் தேசத்தவரில் சிலருடைய நட்பைப் பெறுவதற்காகவே என்று வியாக்கியானம் செய்யப்படுகிறது. துருக்கியர் இத்தாலியின் பயமுறுத்தலுக்கஞ்சியே திடீரென்று மோசூல் சம்பந்தமாய் இங்கிலாந்துடன் சமரசமாய்ப் போனாராயினும் சமயம் வாய்க்கும்போது மோசூல் முழு ஆதிக்கத்தையும் பெறும்படியே முயற்சிசெய்வார்களென்று சொல்லப்படுகிறது. இத்தாலியர் பிரான்ஸ் தேசத்தவரிடம் அனுதாபம் பாராட்டி வந்தாலும் ஜெர்மானியரிடம் துவேஷமே பாராட்டிவருகின்றனர். தனது பழைய ஆப்பிரிக்கா பிரதேசங்களை ஜெர்மானியர்கள் வேண்டிநிற்கும்போது இங்கிலாந்து ஒருவாறு சம்மதம் அளிக்குமாயினும் பிரான்சும் இத்தாலியும் அதைக் கண்டிப்பாய் எதிர்த்து நிற்கும் என்றே சொல்லப்படுகிறது. இவ்விதமாக மத்திய தரைக்கடல் ஓரமாயுள்ள தேசங்களுக்கும் மத்திய ஐரோப்பாவிலுள்ள தேசங்களுக்கும் ஓர் போட்டி ஏற்படக் கூடுமென்பது தெளிவு. இவ்விதப் போட்டியில் இங்கிலாந்தும் அமெரிக்காவும் என்ன செய்யக்கூடும் என்பதையே உலகம் ஆவலாய் எதிர்பார்த்திருக்கிறது. ஆகவே இருதேசங்களின் தற்கால ராஜீய நிலை இன்னதென்பதை ஒருவாறு ஆராய்ச்சி செய்வது தகுதியாகும். (தொடரும்.) D. B.

---

## ஜமீன்களில் அதிகத்தீர்வை.

### குடிகளின் ஆக்ஷேபம்.

சாத்தூர்தாலுகா ஏழாயிரம்பண்ணையில் மணியாச்சி எட்டையாபுரம் ஜமீன்களை சேர்ந்த சில தோட்ட நிலங்களுக்கு அநியாயமான தீர்வை (வருஷம 1-க்கு ஏக்கர் 1-க்கு சுமார் ரூ 19-20 வசூல் செய்வதை ஆக்ஷேபித்து ஷை தீர்வை அநியாயமானதென்றும் 1908 ஹூ்ந்து 1-வது ஆக்ட்டுபடி அது செல்லத்தகாதது என்றும் ஆதியில் ஏற்பட்ட தீர்வை தான் செலுத்திவர முடியுமென்றும் சென்ற 1923-வது வருஷத்தில் சிவகாசி டிவிஷனல் ஆபீஸர் முன்னிலையில் குடிகள் மணியாச்சி ஜமீன்தார்களா மீதல் மட்டும் வியாச்சியம் செய்திருந்தார்கள். ஷை கேஸில் அந்த தோட்டத்திலுள்ள கிணறுகள் யாரால் வெட்டப்பட்டு மராமத்து முதலியதுகள் செய்து வரப்படுகிறதென்ற பிரச்னையே முக்கியமானதாய் இருந்தது. இக்கேஸின் வாதிகளாகிய குடிகளில் பெரும்பாலார் நாடார் குலத்தவர்களான படியால் துவேஷம் காரணமாய் ஜமீன் தரப்புகளுக்கு அனுசரணையாக சிலர் சாக்ஷி சொல்லி குடிகளுக்குப் பிரதிகூலமான தீர்ப்புக்கிடைக்கும்படி செய்துவிட்டனர். குடிகள் தங்களுக்கு பின்னும் நியாயம் கிடைக்க வேண்டுமென்று ராமநாதபுரம் செஷனில் அப்பீல் செய்திருக்கிறார்கள். இதன் மத்தியில் மணியாச்சி 13-ல் 1 பாக ஜமீன் பூமியை கிஸ்திபாக்கிக்காக சர்க்காரின் ஏலத்தில் எடுத்த செகுஜூமூர்த்தி தேவருக்கும் முன் நடந்த கேஸில் சம்பந்தப்பட்ட குடிகளில் சில புள்ளிகளுக்கும் ஷை விஷயமாய் சிவகாசி டிவிஷனல்கோர்ட்டில்வியாச்சியம் நடந்துகொண்டிருக்கிறது. ஷை தேவரவர்களின் செலவாகதைக் கொண்டே சுயஜாதியபிமானங் கொண்டும் கேசை அலட்டி வருகிறார்கள். குடிகள் தங்களுக்கு நியாயம் கிடைக்க வேண்டுமென்று நியாயஸ்தலங்களுக்குச் சென்று வேண்டிக் கொள்ளுகிறார்கள். ஒருக்கால் நியாயம் கிடைக்காவிட்டாலும் நியாயத்திற்காகப் போராடுவதற்கு மகாத்மாவின் நெறியாகிய அஹிம்சா முறைப்படி வரிகொடா இயக்கத்தை ஆரம்பிப்பார்கள் போல் தெரிகிறது. இவ்வண்ணம் நடவாதவாறு நீதிபதிகள் குடிகளுக்கு நியாயம் வழங்கப் பிரார்த்திக்கிறேன். இதுவிஷயமாய் மேதமுக்கிய ஜனத்தலைவர்களும் கவனிக்கும்படி தாழ்மையாய் கேட்டுக்கொள்கிறேன்.

மூ. ச. வன்னியநாடார்.
ஏழாயிரம்பண்ணை.

---


## கிறிஸ்துபஹுவான கீர்த்தனம்.

இதுவிவிலியசோதர சோதரிகள் சமீபத்தில்வரும் கிறிஸ்மஸ் பண்டிகையில் மன்னுயிருக்காகத் தன்னுயிரைவிடுத்த ஏசுபிரானைப்பாடி,பஜனைசெய்யும்படி அச்சியற்றப்பட்டது. தியாகராஜர்தெலுங்கு,தமிழ்மெட்டுகள் 39-ல்39பாட்டுகள்கொண்டது. மெட்டுகள் நவீனநாகரீகமானவை. 38-வதுபாட்டுபிரானின் திருவிளையாடல்யாவையும்அடக்கியுள்ளது. தனிப்புத்தகம் அணா ¼ புத்தகம்5-க்கு ரூ1. தபாற்செலவு வேறு. ஸிலோன், ரங்கூன், முதலிய ஜலப்பிரதேசத்தாரும், உள்நாட்டாரும் மொத்த ஆர்டர் கொடுத்து செலவைக்குறைக்க வேண்டுகிறோம். டிஸம்பர் 22உ வரை கீழ்க்கண்ட விலாசத்திற்கும், அதற்குப்பின் ஆசிரியரிடமும் பெறலாம்.

சாமுயேல் டேவிட்,
உபாத்தியாயர்.
S. B. K. ஹைஸ்கூல்,
அருப்புக்கோட்டை

Tamil Heritage Foundation International Digital Library EBook collection



## நல்ல தருமம்! நல்ல தருணம்!! நல்ல லாபம்!!!

# அருப்புக்கோட்டை
# "நாடார்குல மித்திரன்" க்ஷேம நிதி
# தர்மப்பண்டு லாட்டரிச் சீட்டு.

## மொத்தம் சீட்டுகள் 33000.

சீட்டு 1-க்கு ரூ 1.

## முதல் பிரைஸ் ரூ 3000.

1927-ஹு மே மீ 4 வ க்கு பிரபவ ஹு சித்திரை மீ 22 வ. பிரைஸ் எடுக்கக்கூடும்.

### 1-வது பிரைஸ் ரூ 3000.

| | | |
|---|---|---|
| 2-வது பிரைஸ் | ரூ | 1500 |
| 3-வது பிரைஸ் | ரூ | 1000 |
| 4-வது பிரைஸ் | ரூ | 500 |
| 200 ரூ-ல் 2-க்கு | ரூ | 400 |
| 100 ரூ-ல் 5-க்கு | ரூ | 500 |
| 50 ரூ-ல் 20-க்கு | ரூ | 1000 |
| 20 ரூ-ல் 50-க்கு | ரூ | 1000 |
| 10 ரூ-ல் 100-க்கு | ரூ | 1000 |
| 5 ரூ-ல் 200-க்கு | ரூ | 1000 |
| 3 ரூ-ல் 600-க்கு | ரூ | 1800 |
| 2 ரூ-ல் 2400-க்கு | ரூ | 4800 |
| ஆக பிரைஸ்கள் 3381-க்கு | ரூ | 17500 |
| புக் 1500-க்குக் கமிஷன் | ரூ | 3000 |
| குமஸ்தா சம்பளம், அச்சுக் கூலி, விசேஷக் கமிஷன் வகையறாக்கள் | ரூ | 1800 |
| தனிப் பிரைஸ் | ரூ | 1700 |
| பண்டுக்கு | ரூ | 9000 |
| ஆக | ரூ | 33000 |

குறித்த காலத்தில் பிரைஸ் எடுக்கக் கூடும்.

33000 சீட்டுகளுக்கு மேல் விற்பனையானால் ஈவுப்படி பண்டுக்கும், செலவுக்கும் போக மீதத் தொகையை 4 ரூபாய்ப் பிரைஸ்களாக எடுக்கப்பெறும்.

1-வது பிரைஸ் முதல் 6வதுபிரைஸ்வரைவிழுந்தபுள்ளிகளிடமிருந்து முறையே 150, 75, 50, 25, 10, 10 ரூபாய் அந்தந்தச் சீட்டுவிற்றவர்களுக்குக் கமிஷன் பிடித்துக் கொடுக்கப்பெறும்.

பிரைஸ் விழுந்த புள்ளிகள் ஒரு மாதத்துக்குள் ரசீதை அனுப்பி பணம் பெற்றுக் கொள்ள வேண்டும்.

வெளியூர் புள்ளிகளுக்கு மணியாடர் கமிஷன் கழித்து பிரைஸ் தொகையை அனுப்பக்கூடும்.

சகல விதமான கடிதப் போக்குவரத்தும் சூ. ஆ. முத்து நாடார், "நாடார் குல மித்திரன்" பத்திராதிபர், அருப்புக்கோட்டை என்ற விலாசத்துக்கு அனுப்ப வேண்டும். புஸ்தகம் விற்றவர்கள் தவிர மற்றவர்கள் ரிப்ளை கட்ட வேண்டும்.

### விசேஷக் கமிஷன்.

நூறு ரூபாய்க்கு மொத்தமாகச் சீட்டு விற்றுக் கொடுப்பவர்களுக்கு ஐந்து ரூபாய் விசேஷக் கமிஷன் கொடுக்கக்கூடும்.

மதுரை நாடார் மகாஜன சங்கம் முக்கியஸ்தர்களை அழைப்பித்து அவர்கள் முன்னிலையில் அருப்புக்கோட்டை, "நாடார் குல மித்திரன்" ஆபீஸில் பிரைஸ் எடுக்கப் பெறும்.

### தனிப் பிரைஸ் விபரம்.

| | | |
|---|---|---|
| 1-வது பிரைஸ் | ரூ | 100 |
| 2-வது பிரைஸ் | ரூ | 50 |
| 3-வது பிரைஸ் | ரூ | 20 |
| 4-வது பிரைஸ் | ரூ | 15 |
| 5-வது பிரைஸ் | ரூ | 10 |
| 6-முதல் 10 வரை 5 வீதம் | ரூ | 25 |
| 11-முதல் 750-வரை 2 வீதம் | ரூ | 1480 |
| ஆக | ரூ | 1700 |

தனிப் பிரைஸ், இரண்டு ரூபாய்க்கு மேற்பட்ட தொகைகள் பத்துப் பிரைஸ்களே இருப்பதால் 22 சீட்டுள்ள இரண்டு புஸ்தகம் விற்றவர்கள் தனிப் பிரைஸுக்காக ரூ 2-ம் பிடித்துக் கொண்டு ரூ 38 மட்டும் அனுப்பலாம். தனிப் பிரைஸில் சேர்த்துக் கொள்ள விருப்பமுடையவர்கள் தனிப் பிரைஸ் ரூ 2 பிடித்துக் கொள்ளாமல் ரூ 40-ம் அனுப்பிவைக்கவேண்டும்.

ஐந்து புஸ்தகம் விற்றவர்கள் விசேஷக் கமிஷன் ரூ 5 ம் பிடித்துக்கொண்டு மீத ரூபாயை அனுப்பி வைக்கலாம். தனிப் பிரைஸுக்குரிய ரூபாயை அனுப்பினால் தனிப் பிரைஸில் சேர்த்துக் கொள்ளப்படும். அதற்கும் பிரியமில்லையானால் அதற்குரிய ரூ 5 யும் பிடித்துக் கொண்டனுப்பலாம்.

குறிப்பிட்ட 4—5—27-க்கு 15 நாளைக்கு முன்னதாகவே பணமும், கவுண்ட்டர்பாயிலும் கிடைக்கும்படி அனுப்பித் தர வேண்டும். நேரில்ச் செலுத்த விரும்புவோர் ரசீது வாங்கிக் கொண்டு செலுத்த வேண்டும்.

புஸ்தகம் விற்பனை செய்தவர்களுக்கு பிரைஸ் சாபிதா தயாரானவுடன் அனுப்பக் கூடும். தனியாய் வேண்டுவோர் 1½ அணா ஸ்டாம்பு அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

சூ. ஆ. முத்து நாடார்,
"நாடார் குல மித்திரன்" பத்திராதிபர்.

சொ. ஆ. சொக்கலிங்கபாண்டியர்,
உப பத்திராதிபர், அருப்புக்கோட்டை.

## துண்டுத் துணுக்குகள்.

திருவாங்கூரில் ஓர் ஊரில் ஒரு வீட்டில திருவாங்கூர் சர்க்கரை மில்லைச் சேர்ந்த ஓர் எஞ்ஜினீர் வசித்து வந்தார். அந்த வீடு பேய் வீடென்று ஒருவரும குடியிருக்க விரும்ப வில்லை. ஆயினும் எஞ்ஜினீர் துணிவாய் அதில் குடியிருந்தார். அதில் சில நாட்கழித்து, வெள்ளி செவ்வாய்களில் கடுச்சாம நேரங்களில் பயங்கரமான சப்தம் கேட்டது. ஒருநாள் வெள்ளிக்கிழமை இரவு 12-மணி சுமாருக்கு எஞ்ஜினீர் சாய்வு நாற்காலியில் சாய்ந்து கொண்டு படித்துக் கொண்டிருக்கும்பொழுது இளமையான ஓர் நாயர்வகுப்புப்பெண்ணின் உருவம் தோன்றியது. அவர் உடனே அதனை நோக்கி தைரியமாக நீ யார், எங்கே வந்தாயென்று கேட்டார். அது சமீபத்திலுள்ள பழைய கிணற்றை மூடி விட்டதால் தனக்கு இருக்க இடமில்லையென்றும், தனக்கு ஓர் இடம் கொடுக்க வேண்டுமென்றும் சொல்லியது. உடனே வெளியே போகவேண்டுமென்றும், இல்லாவிட்டால் சுட்டுவிடுவதாகவும் அதனை எஞ்ஜினீர் பயமுறுத்தினர். உடனே அந்தப் பெண் உருவத்திற்குப் பெருங்கோபம் வந்துவிட்டது. எஞ்ஜினீர் துப்பாக்கியிருந்த அறைக்குள் சென்றார். அவருக்கு முன் அதுவும் சென்றது. திரும்ப வந்தபொழுது எஞ்ஜினீர் உடம்பு குளிர்ந்து, திகில் அடைந்து கூக்குரலிட்டு விழுந்து விட்டார். வேலைக்காரன் வந்தபொழுது எஞ்ஜினீர் மயக்கமாய்க் கிடந்தார். ஏதோ புகையும் தோன்றியது. பெண்ணைக் காணவில்லை. இதைப்பற்றி விசாரணை செய்ததில் சில [illegible] பெண்ணுக்கும் நாயர் வாலிபனுக்கும் காதல் ஏற்பட்டிருந்த தென்றும், அவன் அப்பெண்ணைக் கலியாணஞ் செய்வதாக வாக்களித்து வந்து, பின் அவள் ஜாதி சிறிது மட்டமென்று கருதி அவளைக் கலியாணஞ் செய்யாமல் காட்கடத்தி விட்டு ஒரு நாள் இரவு ஒரு கிணற்றருகே அழைத்துச் சென்று அவளைத் தள்ளிவிட்டானென்றும் அந்தப் பெண்ணே இப்பொழுது பேய் வடிவங் கொண்டு திரிகிற தென்றும் சொல்லுகிறார்கள்.

* *

### மனித மீன்.

மனிதர்களைப் போன்ற தலையும் தலைமயிரும் உள்ள மீன்கள் கிழக்கு ஆப்பிரிக்கா சமுத்திரத்தில் மொம்பாஸாவிற்கு வடக்கில் காணப்படுகின்றனவாம். முன்னே நீட்டிக் கொண்டிருக்கும் கண்கள் உள்ள தலையும், மயி[illegible] கின்றனவாம். கைகளே இல்லையாம். தாம்லாமு என்ற கிராமத்தில் செம்படவர்கள் இந்த மீன்களைப் பிடித்து விற்பனைக்கு வைத்திருந்தனராம். அவை 5 அடிக்கு மேல் நீளமாக விருப்பதாயும், பெண் மீன்களின் மார்பு ஸ்திரீகளுடையதைப்போல் இருப்பதாயும், தோல் பார்வைக்குச் சுருங்கியிருக்க போதிலும் தொட்டால் மிருதுவாக இருப்பதாயும் சுதேசிகள் இந்த மீன் மாம்சத்தை அதிகமாக விரும்புவதாயும் தெரிகிறது. ஆனால் அதிகமாக மனிதச்சாயல் இருப்பதால் அதிகாரிகளுக்குப் பூராத் தகவலும் தெரிவித்து விட்டே விற்கப்போகிறார்களாம். இவை சமுத்திர கன்னிகைகள் போலிருக்கின்றனவாம்.

* *

கதிர்காமத்தில் [illegible]

Tamil Heritage Foundation International Digital Library EBook collection



## "எம்பயர் பாம்."




எல்லா நோய்களுக்கும் தேவாமிர்தம்.

The house hold remedy for all ailments is our "Empire Balm"

ஏஜெண்டுகள் தேவை.

புட்டி 1-க்கு ரூபாய் 0-8-0

டசன் 1-க்கு ரூ 5-0-0

விபரத்திற்கு:- எம்பயர்பாம் மனுபாக்சரிங் கம்பெனியென்ற விலாசத்திற்கு எழுதித்தெரியவும்

கீழமாரட்டு வீதி, மதுரை

## வறுமை தொலைந்தது!

வெள்ளியும் அதன் துணைக்கிரகங்களும் ஓங்கின. அது

## சுக்கிரயோகம்.

ஆகையால்,

வினஸ் பிரீ லைப் அஷ்யூரன்ஸ் ஸ்கீமில் ஒவ்வொருவரும் அங்கத்தினராகச் சேருங்கள்.

அங்கத்தினராகச் சேரும் சமயமே, சுக்கிரயோகத்தொடக்கம்.

விபரம் வேண்டுவோர் கீழ்கண்ட விலாசத்திற்கெழுதவும்:—

பி. எஸ். எஸ். ராஜன். I. C. A.

செக்ரட்டெரி, வினஸ் அஷ்யூரென்ஸ் பாங்க், லிமிட்டெட், பிராமின் காலனி. தூத்துக்குடி,

குறிப்பு:—செல்வாக்கும், ஊக்கமுமுள்ள ஏஜெண்டுகள் தேவை. நல்ல சம்பளமாவது கமிஷனாவது கொடுக்கப்படும்

சுத்தக் கதர் உடுத்துங்கள். கை இராட்டினம் சுற்றுங்கள்.



உடனேகுணம் தரும். முக்கியஸ்தர்கள் வாங்கும் தர்ம வைத்தியம்செய்ய ஏதுகாமுள்ளது. உபயோகிக்கும் விதம் மருந்துடன் அனுப்பப்பெறும்.

## தேள்கடி மருந்து.

தைலம்

சீசா 12-க்கு 3-0-0

சீசா 1-க்கு 0-5-0

தூள் புட்டி 1-க்கு 0-6-0

புட்டி 12-க்கு 3-12-0 தபால் செலவு

பிரத்தியேகம். குறைந்தது 3 சீசா அல்லது 3-புட்டி தருவிப்பது நலம்.

க. பெ. ச. சாமத்திரம் சகோதரம்

c/o மகாத்மா காந்தி கதர் வஸ்திராலயம், விருதுநகர்.

காந்தியடிகள் எழுதிய "ஆரோக்ய வழி" என்னும் புஸ்தகம் படியுங்கள்

## HAKEEM. K. MOHAMED YOOSOOF

MUHAMMEDIA MEDICAL HALL

PORTO-NOVO, S. A. Dt (India.)

ஓ நண்பர்காள்!

நமது வைத்தியசாலைக்குநேரில் வந்து பணத்தைப்பற்றி கவனிக்கவேண்டாம். தாதுபுஷ்டிக்காக முதல் தரமான லேகியம். வேணுமென்று கேட்கும் கனவான்களுக்குமட்டும் இதை தனியாகச்செய்து கொடுத்து வந்தோம். இப்போது எல்லா ஜனங்களும் இதன் சுகத்தை அடையும்படி இப்பத்திரிகை மூலமாய் வெளிப்படுத்தி யிருக்கிறோம்.

உலகத்தில் வெளிவந்திருக்கும் லேகியங்களுக் கெல்லாம் மகுடம்

## இராஜ தத்துவ லேகியம்.

இழந்து போனபலத்துக்கும் தளர்ந்து போன நரம்புகளுக்கும் ஒரே வேளை லேகியம் சாப்பிட்டபிறகு அதிக உற்சாகத்துடன் பலத்தை கொடுப்பதில் இதற்கு சமமாய் எதைக்காட்டமுடியும்? இந்தலேகியம் சாப்பிடுகிறவர்கள் இதற்கு சமமானலேகியம்காட்டுவார்களானாலும் சரி அல்லது இதில் சொல்லப்பட்ட குணங்கள் இதில் அவ்வளவாக இல்லையென்று ரூபிப்பார்களானாலும் சரி அவர்களின் பணம் திரும்பக்கொடுத்து விடப்படும்.

உத்தரவாதமுள்ள சத்திய ஔஷதம்.

வீரிய தத்துவத்தையும் நாடி, நரம்பு தாதுகளின் உற்சாகத்தையும் கொடுத்து தேக காங்கையினால் நீற்றுப்போகும் துரிதஸ்கலிதத்தையும் ஒரே வேளை மருந்தில் குணப்படுத்தும். மூளை சொற்பனஸ்கலிதத்தையும் பலப்படுத்தி ஞாபகசக்தியைத் தரும். பற்பல்வாய்வுரோகம், இடுப்புவலி, கைகால்சந்து, பசிமந்தம், மலச்சிக்கல் இவைகளை சுகப்படுத்த வல்லது. முதல் தரமான மருந்தென்று தங்களின் சிநேகிதர் பால் புகழ்ந்து பேசுவீர்கள் பத்தியமில்லை.

ஒருராத்தல் கொண்ட டப்பி 1-க்கு விலை 10—0—0

அரைராத்தல் கொண்ட டப்பி 1-க்கு விலை ரூபா 5—0—0

கால்ராத்தல் கொண்ட டப்பி 1-க்கு விலை ரூபா 2—12—0

வி. பி. செலவு வேறு.

நமக்கு நேரில் ஆர்டர் செய்தால் மட்டில் இந்தலேகியம் கிடைக்கும். மற்றவரிடம் கிடைக்காது.

விலாசம்:—

ஹக்கீம், கா. முஹம்மது யூசுபு,

முஹம்மதியா வைத்தியசாலை,

பரங்கிப்பேட்டை, தென்னாற்காடு ஜில்லா

## உலகெங்கும் பெயர் பெற்ற

## ஸன்பிளவர் சோப்பு & ஸர்தார் சோப்பு.

சர்ட்டிப் பிக்கேட்டுகள் பெற்றவை.

கோல்டு ஸில்வர் மெடல்கள்




எங்கள் கம்பெனியின் சோப்புகளை உபயோகியுங்கள்.

துணிகளை வெண்மையாக்கக்கூடியது
துர்நாற்றங்களை அகற்றக்கூடியது.
மனோற்சாகத்தைத் தரக்கூடியது.
மலிவான விலைக்குகிடைக்கக்கூடியது.
குளிப்பதற்கு பரிமளமுள்ளது.
கோடைகாலத்திற்கு சுருக்கமில்லாதது

நூல்களை கெடுதல் செய்யாதது.
மனதிற்கு திருப்திகாமுள்ளது
மணவர் மனதைமகிழச்செய்வது.
நுரைகள் மிதக்கக்கூடியது.
கெட்ட ரசாயனங்கள் சேராதது.
முழுதும் சுத்தமானது.

குறிப்பு:— விசேஷ வருத்தமின்றி கொஞ்ச நேரத்தில் வஸ்திரங்கள் தோய்க்கப்படும். கடினமான நீரிலும், மிருதுவான நீரிலும், குளிர்ந்த நீரிலும், சுடு நீரிலும், மழை நீரிலும், ஊற்று நீரிலும் உபயோகிக்கலாம்.

வஸ்திரத்தின் அழுகைப் போக்கவும் குளிப்பதற்கும் குளிர்ந்த வாசனையோடு கூடிய சோப் வேண்டுமானால்,

ஸன் பிளவர் சோப்புகளை எப்போதும்உபயோகியுங்கள்.

கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதினால் விலை விபர ஜாப்தா அனுப்புவோம்.

V. K. அன் ஸன்,

பிராஞ்சு ஆபீஸ்:- அம்மன் சந்நிதி, சவுத் இந்தியன்பிஸ்கட் & சோப் மேனிபாக்சரர்ஸ்.

என் ஏழை சகோதரர்களே! என் கவலைப்படுகின்றீர்கள்?

50 ரூபாய்முதல் 500 ரூபாய்வரை மாதம் சம்பாதிக்கலாம்.

## கைத்தொழில் வணிக இரகஸ்யம்.

இதில் சோப்புகள், மெழுகுவத்தி, நெருப்புக் குச்சி, பெப்பர்மெண்ட், பிஸ்கத்து, கேக்குகள், வாசனைஎண்ணெய்கள், சாம்பிராணிவத்திகள், பன்னீர், சர்பத்துகள். இங்கி, பூட் பாளீஸ், வார்னிஷ், சாயங்கள், பலவித மருந்துகள், காகிதம், பென்சல் முதலியவைகள் செய்யும் முறைகளுடன், 200 பக்கங்கள் கொண்ட பெரிய புஸ்தகம் ரூபாய் 1—8—0. உடனே எழுதுங்கள்.

ஜயலக்ஷ்மி புஸ்தகசாலை,

64, வெங்கடமேஸ்திரி வீதி, மண்ணடி, மதராஸ்.

## எங்கும் கியாதி பெற்ற

## இரணியல் ஜரிகை வஸ்திரங்கள்.

சகல ஜாதியாருக்கும், மொத்தமாக வியாபாரிகளுக்கும் அவ்வவர் விருப்பத்திற்கிணங்கும்படி புடவை, கவணி, ஸாரி பலமாதிரி புளியிலை கரை நேரியல், ஜரிகைச் சேலை, விளிம்பு ஜரிகை துப்பட்டாக்கள், வேஷ்டிகள், கட்டி நினுசுகள், அனேக விதமான துண்டுகள், பட்டுத் துப்பட்டாக்கள் முதலிய எவ்வித வஸ்திரங்களும் உயர்வான தரமாக ஆர்டர் கிடைத்த 10 தினங்களுக்குள் வி. பி. மூலமாக அனுப்பப்படும். கூடுதல் விபரம் வேண்டியவர்கள் மானேஜர் மூலமாக அறிந்து கொள்ளலாம்.

இ. ஏ. நீலகண்ட பிள்ளை,

மானேஜிங் புரோப்ரைட்டர்,

"இரணியல் கிளாத் ஸ்டோர்"

இரணியல், நெய்யூர் போஸ்டு, தென் திருவிதாங்கூர்.

## எலிமெண்டரி பாட ரத்தினங்கள்.

வில்விக்ஸ், நேச்சர் ஸ்டடி ஸயன்ஸ் அடங்கியது. எல்லாப் பாடசாலைகளுக்கும் உபாத்திமாருக்கும் மிகவும் அவசியம். 3-ம் பதிப்பு விலை அணா 14. இது ஆசிரியரிடமும், சென்னைவேப்பேரி, எஸ். பி. வி. கே. டிப்போவிலும் கிடைக்கும்.

ஜேம் வக்கபிளரி.

இங்கிலீஷ் தமிழ் முதல் புஸ்தகம் 6 அணா; 2-ம் புஸ்தகம் 8 அணா. இங்கிலீஷ் லேசாய்க்கற்க எல்லாருக்கும் 6 மாதத்தில் இங்கிலீஷ் பேச எழுத லெட்டர் ரைட்டரும் அடங்கும். மெத்த அவசியம். ஒரு நேர்த்தியான ஆசிரியர் எஸ். வி. கோ இது ஆசிரியர் நாகபட்டணம் மிஷின் ஹைஸ்கூல் சென்னை எஸ். பி. யில்பிள்ளையிடமும் ஆரணி மிஷின் பிரவிலும், ஷை வி. கே. டிப்போவிலும் கிடைக்கும். உபாத்திமாருக்கும் வியாபாரிகளுக்கும் 12 ... க்குமேல் விசேஷித்த கமிஷன்.